இவ்வுலகில் உண்மையான அமைதி நிலவ வேண்டும் என்றால் அமைதிக்கான பணியை குழந்தைகளிடமிருந்துதான் நாம் தொடங்க வேண்டும்.

-மகாத்மா காந்தி

# மனித உரிமை மாணவர் மன்றம்

HRC



மனித உரிமைகளைக் கலாச்சாரமாக வளர்த்தெடுப்போம்






# சமூகத்தை நோக்கி குழந்தைகள்

**Children Towards Community - CTC**


Institute of Human Rights Education
IHRE

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை -625002.
தமிழ்நாடு
Ph:91-452-2539520 Fax: 91-452-2531874
E-Mail:ihre@pwtn.org
Website: www.ihre.in / www.peopleswatch.org

HOPE

**ஹோப் நிறுவனம்**

106, எம்.ஜி.ஆர் நகர், 100 அடி சாலை
புதுச்சேரி-605 004.
Ph:+91-413-2266741
E-Mail:vrhope@gmail.com
Website: www.vrhope.org


## மனித உரிமைக் கல்வி நிறுவனம் - IHRE

## ஹோப் நிறுவனம் - HOPE

# மனித உரிமை மாணவர் மன்றம்
(Human Rights Club-HRC)

"மனித உரிமைகளைக் கலாச்சாரமாக வளர்த்தெடுப்போம்"

# சமூகத்தை நோக்கி குழந்தைகள்...
## (Children towards Community-CTC)

மாணவர் மன்றத்தின் பெயர்.............................................................................................

மன்றத்தின் எண் & மன்றம் துவக்கப்பட்ட நாள்.........................................................................

பள்ளியின் பெயர்.........................................................................................................

ஊர்.......................................................................................................................

நகராட்சி/கொம்யூன்....................................................................................................


**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**
6. வல்லபாய்சாலை, சொக்கிகுளம்,
மதுரை-625 002.
தொலைபேசி: 0452-2531874 & 2539520
தொலைநகலி: 0452 - 2531874
மின்னஞ்சல்: ihre@pwtn.org
இணையதளம்: www.ihre.in

**ஹோப் நிறுவனம்**
106, எம்.ஜி.ஆர் நகர்,
100 அடி சாலை,
புதுச்சேரி - 605 004.
தொலைபேசி: 0413-2266741
மின்னஞ்சல்: hopeindia2015@gmail.com
இணையதளம்: www.vrhope.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **சமூகத்தை நோக்கி குழந்தைகள்...** (Children towards Community-CTC) |
| நூலாக்கம் | : | ல.பெர்னாட் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு-செப்டம்பர் 2015 |
| வடிவமைப்பு | : | M. ஜெயக்குமார் & V.சத்யா |
| வெளியீடு | : | மனித உரிமைக் கல்வி நிறுவனம்<br>6, வல்லபாய்சாலை, சொக்கிகுளம்<br>மதுரை-625 002 |
| ISBN NO | : | |
| தொலைபேசி | : | 0452-2539520 |
| தொலைநகலி | : | 0452-2531874 |
| மின்னஞ்சல் | : | ihre@pwtn.org |
| இணையதளம் | : | www.ihre.in |
| அச்சாக்கம் | : | ஆன்டோ ஆர்ட் கிராப்ட், சிவகாசி |


***(மனித உரிமை மாணவர் மன்றக் குழந்தைகள் சமூகத்தை புரிந்து கொள்ளவும் சமூக ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் இக்கையேடு உருவாக்கப்பட்டுள்ளது)***



# முன்னுரை

பள்ளிகளில் வகுப்பறைகளில் மனித உரிமைக் கல்வியை ஆசிரியர்களே கற்றுக் கொடுக்கும் முறை 1998 ஆம் ஆண்டு முதல் மனித உரிமைக் கல்வி நிறுவனத்தால் இந்தியாவில் 18 மாநிலங்களில் 10 இந்திய மொழிகளில் பயிற்சி கையேடுகளுடன் நடத்தப்பட்டு வந்தது. எனினும் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியின் பயணம் தமிழ்நாட்டில் தமிழில் மாணவர் பயிற்சி கையேடுகளுடன் தொடங்கப்பட்டது என்பது நிறையபேர் அறியாதது. கடந்த பல ஆண்டுகளாக வகுப்பறை அடிப்படையிலான மனித உரிமைக் கல்வி என்பதை பள்ளிகளுக்கு வரும் குழந்தைகள் அவர்கள் பகுதிகளில் செயல்பாடு சார்ந்த மனித உரிமைக் கல்வியாக மாற்றுவதற்கு நிறைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இளம் மாணவர்கள் மத்தியில் உரிமை அடிப்படையிலான கற்றுக் கொளளுதலைஅறிமுகப்படுத்துவதன் நோக்கம், இது நீண்ட காலத்திற்கு அவர்களை அவர்களின் சொந்த உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயல்படவைக்கும் என்பதனாலாகும்.

சமுதாய அடிப்படையில் மனித உரிமைக் கல்வியை குழந்தைகளுக்கு கற்பிப்பதற்கு, மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் தமிழ்நாடு பிரிவு தமது உள்ளூர் சமுதாயங்களில் குழந்தைகளின் செயல்பாடுகளை வழியமைத்தும் ஒரு கையேட்டை தயாரித்துள்ளது. குழந்தைகளின் செயல்பாடுகள், அவர்களது சமுதாயத்தை மையப்படுத்தி உள்ளாட்சி வழிமுறைகள், சமூக நலத் திட்டங்கள், சுத்தம் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், பள்ளிக் கல்வித் திட்டங்கள் மற்றும் உள்ளூர் சுற்றுப்புற சூழ்நிலைமேல் கவனம் கொள்வது போன்றவற்றிற்கு உறுதுணை செய்யும்.

மனித உரிமைகள் உள்ளூர் சமுதாயத்தில் எப்படி சென்றடைகிறது மற்றும் மனித உரிமைகள் இந்நாட்டில் உள்ள பெரும்பாலான அளவில் இருக்கும் சாமானியர்களின் வாழ்க்கையில் எப்படி பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இளம் குடிமகன்கள் நன்றாக புரிந்து கொள்ள இந்தக் கையேடு உதவும் என்று நம்புகிறோம்.

இந்தக் கையேட்டை அனைத்து மனித உரிமை மன்றங்களும் உபயோகிக்கும் வகையில் உருவாக மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் தமிழக ஒருங்கிணைப்பாளர் திரு. பெர்னாட் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். மேலும் இந்தக் கையேடு ஐ.நாவின் மனித உரிமைக் கல்வி பிரகடனம் 2011 மற்றும் ஐ.நாவின் பள்ளிக்குழந்தைகள் மத்தியில் மனித உரிமைக் கல்வித்திட்டம் ஆகியவற்றை நன்கு நடைமுறைப்படுத்த உதவும் என்று நான் நம்புகிறேன்.

அன்புடன்

வழக்கறிஞர் ஹென்றி திபேன்
நிர்வாக இயக்குநர்
மனித உரிமைக் கல்வி நிறுவனம்


தேதி : 08.12.2015

இடம் : மதுரை

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நம்ம ஊரு சுற்றுலா, ஊர் சுற்றலாம் வாங்க... | 01-07 |
| 2. | நம்ம அரசாங்கம் | 08-13 |
| 3. | கல்வியும் நலனும் நம் கண்கள் என்போம் | 14-20 |
| 4. | சுத்தம் சுகம் தரும்-நம்ம ஊரு அனுபவம் | 21-26 |
| 5. | மக்கள் நலத் திட்டங்களும் கிராம முன்னேற்றமும் | 27-34 |
| 6. | தெரிந்து கொள்வோம் நமக்கான சட்டங்களை | 35-48 |
| 7. | சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நமது கடமையும் | 49-54 |
| 8. | சாலை விபத்தில்லா தேசம் காண... | 55-62 |
| 9. | குடி நோய் எனும் அரக்கன் ஒழிய... | 63-70 |
| 10. | சந்திக்க, சிந்திக்க, செயல்பட... | 71-74 |
| 11. | மனித உரிமைகளை கலாச்சாரமாய் கொண்டாட... | 75-79 |

# 01. ஊர் சுற்றலாம் வாங்க, நம்ம ஊரு சுற்றுலா



கிராமச் சுற்றுலா என்பது குழந்தைகள் தாங்கள் வாழும் சூழலையும், சமூக, பொருளாதார, கலாச்சார கூறுகளையும் அறிந்து கொள்ளவும், குழந்தைகள் தங்கள் பார்வையில் தம்முடைய கிராமத்தின் அமைவிடம், கிராமத்தில் உள்ள வசதிகள் மற்றும் வாய்ப்புகள்-அவை பகிர்ந்து கொள்ளப்படும் விதங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் **ஊர் சுற்றலாம் வாங்க, நம்ம ஊர் சுற்றுலா** என்ற இந்த முதல் பகுதி அமையும் என்ற நம்பிக்கையுடன் வாருங்கள் நம்ம கிராமத்திற்கு செல்வோம்...

## திட்டமிடுதல்-Planning

- மனித உரிமை மாணவர் மன்ற மாதாந்திரக் கூட்டத்தில் கிராமச் சுற்றுலா குறித்து விவாதித்து பள்ளித் தலைமையாசிரியரிடம் ஆசிரியர் மூலம் அனுமதி கோரலாம். இக்கிராமச் சுற்றுலாவில் மனித உரிமை மாணவர் மன்றத்தில் உள்ள குழந்தைகள் மட்டுமே கலந்து கொண்டால் நலமாக இருக்கும். ஏனெனில் தொடர்ந்து அவர்கள் அதை விவாதிப்பார்கள்; சில பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள்.
- மனித உரிமைக் கல்வி ஆசிரியர், தலைமையாசிரியருடன் இணைந்து கிராமச் சுற்றுலாவிற்கான தேதியை இறுதி செய்ய வேண்டும். இறுதி செய்த பின்பு மாணவர்களிடம் கிராம சுற்றுலா பற்றிய விளக்கத்தை அளிக்க வேண்டும்.
- குழந்தைகளின் பெற்றோருக்கும் கிராமச் சுற்றுலா பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டும். முந்தைய நாளில் பள்ளி காலை கூடும் நேரத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தகவல்களைத் தெரிவிக்கலாம்.
- குழந்தைகளுக்கான குளுகோஸ், குடிநீர், சிற்றுண்டி போன்றவற்றைக் கிராமத்தில் ஊராட்சித் தலைவர் மற்றும் ஏனையோரிடம் கேட்டுப் பெறலாம்.
- கிராமத்தில் பொது இடத்தில் வைத்து குழந்தைகளுக்கு தன்னுடைய கிராமம் பற்றிய கருத்தமர்வுகள் நடத்தலாம். ஏனெனில் அதிகம் நடக்க வேண்டியிருந்தால் குழந்தைகள் சோர்ந்து போக வாய்ப்புள்ளது.

## கிராமச் சுற்றுலாவில் நாம் காண்பது என்ன?

- கிராமத்தின் அமைவிடத்தை அறிந்து கொள்ள கிராம வரைபடத்தைத் தயார் செய்ய வேண்டும். கிராமத்தின் மையப் பகுதிக்குச் சென்று திசைகளை வைத்து துல்லியமாக கிராம வரை படத்தைக் குறிக்க வேண்டும். வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு என திசைகளையும் குறித்து கொள்ள வேண்டும். தெருக்களையும் குடியிருப்புகளையும் வரைய வேண்டும்.
- முக்கிய சாலைகள், பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையம், நிறுத்தங்கள், கடைகள், அரசு கட்டிடங்கள், காவல் நிலையம், சந்தைகள், குளங்கள், ஏரிகள், பொதுக் கூட்ட இடம், மைதானம், குடியிருப்புகள் அனைத்தும் ஒரே மாதிரியாக உள்ளதா? அல்லது மாறுபாடுகளுடன் உள்ளனவா என்று கூர்ந்து கவனிக்கவும். இயற்கை வளங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க வேண்டும். குறிப்பாக ஆறு (மணல் அள்ளப்பட்டால்), ஏரி (ஆக்கிரமிப்பு) குளங்கள் (ஆக்கிரமிப்பு-மாசு), ஓடைகள், கால்வாய்கள் (ஆக்கிரமிப்பு).
- அனைத்து மக்களும் ஒற்றுமையாக உள்ளனரா? அனைத்து வகை மக்களும் ஒரே குடியிருப்பில் உள்ளனரா? அல்லது தனித் தனியான குடியிருப்புகளில் உள்ளனரா என்றும் கேட்டு தெரிந்து கொள்ளவும். மக்கள் தொகை-தோராயமாக பெரியவர்கள் மற்றும் 18 வயதிற்குட்பட்டவர்கள்.
- கிராமத்தில் உள்ள அனைத்துப் பொது இடங்களும் அனைவரும் கூடும் இடமாக உள்ளதா என்று கூர்ந்து கவனிக்கவும். அல்லது சிலருக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறதா? மக்கள் கொண்டாடும் திருவிழாக்கள், பண்டிகைகள் என்ன என்று கேட்டு தெரிந்து கொள்ளவும்.
- திருவிழாக்கள் உங்களுக்கு எந்த வகையில் மகிழ்ச்சியளிக்க கூடியதாக உள்ளது.
- கிராமத்தில் மக்கள் பேசக் கூடிய மொழிகள் எவை? வரிசைப்படுத்துங்கள். அதிகம் மக்கள் பேசும் மொழி, குறைவான மக்கள் பேசும் மொழி எவை?
- கிராமத்தில் மக்களின் பிரதான தொழில் என்ன? எத்தனை பேர் அரசுப் பணியில் உள்ளனர். படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்கள் தோராயமாக எத்தனை பேர் உள்ளனர் என்றும் கணக்கிடவும்.
- மக்கள் அனைவரும் சமமாக பழகுகின்றனரா? அதில் சமத்துவ உணர்வு உள்ளதா? பாகுபடுத்தும் செயல்கள் / சொற்கள் பயன்படுத்தப்படுகின்றனரா? புண்படுத்தும் சொற்கள் வழக்கு மொழியாக உள்ளதா? அவைகளை வரிசைப்படுத்துங்கள்.

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

- குடிநீர், சிற்றுண்டி, தேநீர், வழிகாட்டும் உள்ளூர் இளைஞர்கள்



## யார் ஏற்பாடு செய்வது? எப்பொழுது?

- தலைமையாசிரியர்களின் ஒத்துழைப்புடன் மனித உரிமைக் கல்வி ஆசிரியர் இச்சுற்றுலாவை ஏற்பாடு செய்யலாம். ஆண்டின் தொடக்கத்தில் முதல் பருவக் காலத்தில் இச்சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யலாம். கூடியவரை மாணவர் மன்ற குழந்தைகளை ஒருங்கிணைக்க ஊக்குவிக்கலாம்.

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**செயல்பாடு-01**

**படிநிலை-01 மாணவர்களை குழுவாகப் பிரித்தல்**

- சுற்றுலாவிற்கான நாளை இறுதி செய்து மாணவர்களை சிறு குழுக்களாக ஒரு குழுவிற்கு 10 பேர் வீதம் பிரிக்கலாம். அக்குழுவிற்கு ஒரு குழுத் தலைவரை நியமிக்கலாம். காலை முதல் மதிய உணவு நேரம் வரை சுற்றுலாவை கொண்டு செல்லலாம்.
- இருபால் பள்ளியாக இருந்தால் குழுவில் சரி பாதி பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். குழுத் தலைவர் பொறுப்பும் சரி பாதி பெண் குழந்தைகளுக்கு ஒதுக்க வேண்டும்.
- சுற்றுலா புறப்படும் முன்பு ஆசிரியர் குழந்தைகளுக்கு கவனமாக கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து கூறலாம். புறப்படும் போது வருகைப் பதிவு எடுக்கலாம். குழந்தைகள் அனைவரும் எழுது பொருட்கள் கொண்டு வர சொல்லலாம்.
- இங்கு சுற்றுலா என்பது ஏதோ வாகனத்தில் சென்று பார்ப்பது அல்ல மாறாக நடந்தே சென்று நம் கிராமத்தை வித்தியாசமான கோணத்தில் பார்ப்பதே.

**படிநிலை-02 கிராமத்தின் வரைபடத்தை வரைதல்**

- அனைத்து வீதிகளையும் பார்த்த பின்பு கிராமத்தின் மையப் பகுதிக்கு வந்து கிராமத்தின் வரைபடத்தை வரையலாம். அதில் வீதிகள், வீடுகள், அலுவலகங்கள், வங்கி, பேருந்து நிறுத்தம், பள்ளி, மருத்துவமனை, கடைகள், பொது இடங்களான ஆறு, கால்வாய், சிறிய பாலங்கள், கோவில்கள், போன்றவற்றை குறிக்கலாம். குளங்கள், ஏரிகள் காட்டலாம். கிராமம் என்பது இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கலாம். அதனால் அதையும் கருத்தில் கொள்ள கேட்டுக் கொள்ளலாம்.

**படிநிலை-03 கிராமத்தின் பொருளாதார, கலாச்சார கூறுகளை அறிதல்**

- கிராமத்தில் வாழும் முதியோர், ஓய்வுப் பெற்ற ஆசிரியர்கள், முன்னாள், இன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கிராமத்தின் நிலையைக் கேட்டு அறிந்து கொள்ளலாம். குறிப்பாக மக்கள் பேசும் மொழி-அதிகம் பேர் பேசும் மொழி, குறைவானவர்கள் பேசும் மொழி, அதிகபட்சமாக எத்தனை மொழிகளைப் பேசுகின்றனர் என்பதையும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.
- கிராமத்தில் சிலரை ஏசுவதற்கு வசைச் சொற்களை பயன்படுத்துகின்றனரா? அதை யாருக்கு எதிராக பயன்படுத்துகின்றனர்.
- கிராமத்தில் உள்ள மக்கள் எந்தெந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை கேட்டு தெரிந்து கொள்ளலாம். எந்தெந்த குல தெய்வங்களை வணங்குகின்றனர் என்பதையும் கேட்டு தெரிந்து கொள்வதோடு சிறிய நம்பிக்கைகள், கிராமத்தில் நடக்கும் சடங்குகள், விழாக்கள் மற்றும் சில நல்ல மதிப்பீடுகளையும் கேட்டு தெரிந்து கொள்ளவும்.
- ஊரில் உள்ள பெரியவர்களால் சொல்லப்படும் கதைகள், பழமொழிகள், சொலவடைகளை தொகுக்கவும்.

- கிராமத்தின் பன்மைப் பண்புகள் மற்றும் வரலாற்றுச் சிறப்புகளை தொகுக்கவும்
- தோராயமாக அரசுப் பணியில் உள்ளவர்கள், தனியார் துறையில் பணி செய்பவர்கள், சொந்த தொழில் செய்பவர்கள், விவசாயம் இன்னும் பிற...
- கிராமத்தில் உள்ள அரசியல் கட்சிகள், இயக்கங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பற்றிய விபரம்.
- கிராமத்தில் உள்ள பொது இடங்களில் நிலையைப் பற்றி பார்த்தும், கேட்டும் தெரிந்து கொள்ளலாம் அதில் குறிப்பாக ஆறு, ஏரி, கால்வாய், குளம் போன்றவை நல்ல நிலையில் உள்ளனவா? அல்லது மாசு அடைந்துள்ளதா? என்பதையும் கவனிக்கவும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்றும் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

**படிநிலை-04 விவாதம் செய்தல்**

- கிராமத்தை பார்வையிட்ட பின்பு இறுதியாக கிராமத்தில் உள்ள ஓர் இடத்தில் அமர்ந்து பார்த்த, கேட்ட விசயங்கள் குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ளலாம். இந்த அமர்வை மாணவர் மன்றத்தை சார்ந்த குழந்தைகளே வழிநடத்தலாம். மனித உரிமைக் கல்வி ஆசிரியரும் பிற தன்னார்வலர்களும் அமைதியாக திசைப்படுத்தினால் போதுமானது. இங்கு குழந்தைகள் கருத்துக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்க வேண்டும். பெரியவர்களின் கருத்தை பதிவு செய்ய வேண்டாம். அவர்கள் பார்வையில் அவர்களின் கிராமம் எப்படி உள்ளது என்பதை அவர்களே அறிந்து கொள்வார்கள்.

**படிநிலை-05 கட்டுரை வரைதல்**

- மாணவர்களை என் கிராமம் என்ற பெயரில் ஒரு கட்டுரையை எழுதி அடுத்த மாணவர் மன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளலாம். அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ் அளிக்கலாம்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- மனித உரிமைப் பார்வையில் அவர்களின் கிராமம் எப்படி உள்ளது என்பதைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.
- சமூக வாழ்க்கை என்றால் என்ன என்ற நேரடி அனுபவம் பெறுவார்கள்.
- கிராமத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார கூறுகளையும் அதன் பாதிப்புகளையும் அறிந்து கொள்வர்.
- தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்வர்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- உள்ளூர் இளைஞர்கள், ஊராட்சி மன்ற தலைவர், உறுப்பினர்கள், ஓய்வுப் பெற்ற ஆசிரியர்கள், அலுவலர்கள்.

- மாணவர் மன்றம் தான் சார்ந்த சமூகத்துடன் சிறப்பாக தொடர்பு கொள்ளவே இக்கையேடு.
- கிராமச் சுற்றுலா என்பது குழந்தைகள் மனித உரிமைப் பார்வையில் என்னுடைய கிராமம் உள்ளதா என்று அறிந்து கொள்ளவே ஏற்பாடு செய்யப்படுகிறது. குழந்தைகளின் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் வகையில் நடத்தப்படுகிறது.



## தெரிந்து கொள்ள......

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

### இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு-14

சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள் அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது.

### பிரிவு-15-20

கடைகள், பொதுமக்கள் கூடும் இடங்களம், தங்கும் விடுதிகள், பொழுதுபோக்கு இடங்கள், கிணறுகள், குளங்கள், சாலைகள், நீராடும் துறைகள், அரசின் பொதுவான இடங்களில் சாதி, சமயம், இனம், பால், அல்லது வேறு ஏதேனும் முறைகளில் எந்தவொரு குடிமகனையும் கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தக் கூடாது.

### பிரிவு-17

தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதால், எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது தடைசெய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையை கடைப்பிடிப்பது சட்டத்தின்படி குற்றமாகும்.

### பிரிவு-24

14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும், சுரங்கத்திலும் மற்றும் பிற அபாயகரமான தொழிலும் ஈடுபடுத்தக்கூடாது.

### பிரிவு-25

அனைவரும் அவரவர் மனசாட்சிபடி மதத்தினை பின்பற்ற சம உரிமை உண்டு. பொது அமைதி, ஒழுக்க முறைமை, சுகாதாரம், ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒரு மதத்தை தழுவ, பரப்ப அனைவருக்கும் உரிமை உண்டு.

## அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948

### பிரிவு-01

எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும் மனசாட்சியும் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே ஒருவரோடு ஒருவர் சகோதரத்துவ உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

### பிரிவு-15(02)

தன்னிச்சையாக எவரது தேசிய இன உரிமையைப் பறிப்பதற்கோ, அவரது தேசிய இன அடையாளத்தை மாற்றிக் கொள்வதற்கான உரிமையை மறுப்பதற்கோ உரிமை இல்லை.

### பிரிவு-18

சிந்தனை, மனசாட்சி மற்றும் சமய சுதந்திரத்திற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. சமயம் அல்லது நம்பிக்கையை மாற்றிக் கொள்வதற்கான சுதந்திரமும் தனித்தோ அல்லது கூட்டாகவோ வழிபடுவதற்கும், கடைப்பிடிப்பதற்கும் அல்லது வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் உண்டும்.

### பிரிவு-27

தடையின்றி சமுதாயத்தின் கலாச்சார வாழ்க்கையில் பங்கேற்பதற்கும், கலைகளை அனுபவிப்பதற்கும் உரிமை உண்டு.

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

### பிரிவு-07

எவ்வித பாகுபாடுமின்றி சம வேலைக்கு சம ஊதியம், நியாயமான ஊதியம், கண்ணியமாக தனது குடும்பத்தினை நடத்தி, போதுமான ஊதியம், பாதுகாப்பான, சுகாதாரமான பணிச்சூழல், நியாயமான வேலை, நேரம் மற்றும் விடுமுறைகள் உள்ளிட்ட உரிமைகளை நாடுகள் அங்கீகரிக்க வேண்டும்.

### பிரிவு-15

கலாச்சார வாழ்க்கையில், பங்கு பெறும் உரிமையும், அறிவியல் வளர்ச்சியால் விளைந்த பயன்களை அனுபவிக்கும் உரிமையும் அனைவருக்கும் உண்டு. அறிவியலையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் பரவலாக்குவதற்கும் உரிமை உண்டு.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

### பிரிவு-02


இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல், தேசிய, இனம், இயலாமை, பிறப்பு இவைகளின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடுகள் கூடாது.

### பிரிவு-30

சமய, மொழி, இனம், சமூகம் சார்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் சார்ந்த கலாச்சாரத்தை அனுபவிக்கவும், ஒரு குறிப்பிட்ட சமயத்தைத் தழுவிக் கடைபிடிக்கவும் அவர்தம் தாய்மொழியைப் பயன்படுத்தவும் உரிமையுண்டு.

## பிரிவு-01

தன் நாட்டு எல்லைக்குள் வாழும் சமய, இன,மொழிச் சிறுபான்மையினரின் தனித்த அடையாளங்களை அரசுகள் பாதுகாப்பதோடு, அவர்களின் தனித்த அடையாள வளர்ச்சிக்கான சூழல்களையும் உருவாக்க வேண்டும்.



# 02.நம்ம அரசாங்கம்



## அறிமுகம்-Introduction

நம் நாடு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சுதந்திரம் பெற்றது. 1950 ஆம் ஆண்டு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் நமக்கான அரசியல் சாசனம் உருவாக்கப்பெற்று நடைமுறைக்கு வந்தது. அரசியல் சாசனம் நம் நாட்டின் அடிப்படை தத்துவங்களை அதன் முகப்புரையில் தெளிவாக விளக்கியுள்ளது. அவை;-

- இந்தியா இறையாண்மை கொண்ட, சோசலிச, மதச்சார்பற்ற, குடியரசு நாடாகும்.
- சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியலில் நீதி
- சிந்திக்க, வெளிப்படுத்த, நம்பிக்கை வைக்க மற்றும் வழிபடுவதற்கான சுதந்திரம்
- அனைவருக்கும் சம அந்தஸ்து மற்றும் சம வாய்ப்பு
- அனைவரும் சகோதரத்துடன் தனி மனித மாண்பை மதித்திட வேண்டும்.

சோசலிச, இறையாண்மை கொண்ட குடியரசு நாடு என்பதன் அடிப்படை நோக்கமே நம்மை நாமே ஆள்வது, தன்னுரிமை கொண்டது, சுதந்திரமாக பிறர் தலையீடின்றி முடிவெடுக்கும் உரிமைகளைக் கொண்டது என்றும் பொருள்படும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் உள்ளதே நாடாளுமன்றம், சட்டமன்றம், பஞ்சாயத்து ராஜ் என்று அழைக்கப்படும் உள்ளாட்சி அமைப்புகள். மேற்கண்ட மன்றங்களில் நம்மிலிருந்து நம்மால் பெரும்பான்மையாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்கள் நலனுக்கான திட்டங்களைத் தீட்டுவார்கள். தீட்டிய திட்டத்தை நிர்வாகம் மற்றும் இதர பொருத்தமான அமைப்புகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவார்கள்.

தேசிய அளவில் நாடாளுமன்றமும், மாநில அளவில் சட்டமன்றமும் இருந்தாலும் மிகுதியாக மக்கள் பங்கேற்கும் அமைப்பாக உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. ஜனநாயகத்தை நாம் நேரடியாக,

அருகிலேயே அனுபவிக்கும் ஒரு அமைப்பாக உள்ளதே உள்ளாட்சிகள். உள்ளாட்சிகள் அமைப்பைப் பற்றியும், உள்ளாட்சியின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் மாணவர்கள் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் இப்பயணம் அமையும்.

## திட்டமிடுதல்-Planning

- முதலில் பள்ளி எந்த ஊராட்சியின் கீழ் வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- ஊராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் பெயர் என்ன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.
- பள்ளி அமைந்துள்ள பகுதியின் உறுப்பினர் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.
- கிராம ஊராட்சியைப் பார்வையிட உகந்த தேதியை பள்ளித் தலைமையாசிரியருடன் இணைந்து முடிவு செய்ய வேண்டும்.
- உகந்த நேரத்தை கிராம ஊராட்சி மன்றத் தலைவருடன் திட்டமிட்டு அவர்கள் குறிப்பிடும் நேரத்திற்கு சென்றால் அங்குள்ள பணிகளும் பாதிக்கப்படாமல் நாமும் அதிக நேரம் பயனுள்ள வகையில் செலவிடலாம்.
- கிராம ஊராட்சி அலுவலகம் பள்ளியிலிருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்றவாறு நடந்து செல்லுதல் அல்லது உரிய வாகனம் ஏற்பாடு செய்து அழைத்துச் செல்லலாம்.
- முதல் நாளே குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் மேற்கண்ட தகவல்களைக் கூறியதை உறுதிச் செய்ய வேண்டும்.
- உணவு நேரத்தில் செல்வதைத் தவிர்க்கலாம்.
- பயணம் செல்லும் குழந்தைகளின் வருகைப் பதிவு சரியாக இருக்கிறதா என பார்த்துக் கொள்ள வேண்டும்.

## கிராம ஊராட்சி அலுவலகம் பார்வையிடல் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்ன?

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்-1994 இன்படி தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் அமைப்பு மற்றும் தெரிவு செய்யும் முறையை அறிந்து கொள்ளலாம். அவை:-

- கிராம ஊராட்சி மன்றம்-தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றிய மன்றம்-ஒன்றிய தலைவர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள்,
- மாவட்ட ஊராட்சி- மாவட்டக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.
- ஊராட்சிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அமையலாம்
    - 500 முதல் 2000 வரை-6 உறுப்பினர்கள்
    - 2000 முதல் 6000 வரை-9 உறுப்பினர்கள்

- 6000 முதல் 10000 வரை-12 உறுப்பினர்கள்
- 10000 முதல் ... 15 உறுப்பினர்கள்.
- கிராம ஊராட்சியில் 2 முதல் 5 வார்டுகள் இருக்கும்.
- பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம்.
- மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- கட்டாயம் குறைந்தது இரண்டு கிராம சபை கூட்டங்கள் நடத்த வேண்டும்.

## கிராம ஊராட்சிகளின் கடமையும் அதிகாரங்களும்

- கிராமத்தில் சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் அமைத்தல்
- கிராம மனையிடங்களை விரிவாக்குதல் மற்றும் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி
- பொது இடங்களில் விளக்கு வசதி செய்தல்
- வடிகால் வசதிகளைச் செய்தல்
- பொது இடங்களைத் துப்புரவு செய்தல் அல்லது சுத்தப்படுத்துதல்
- பொதுக் கழிப்பிடங்களுக்கு ஏற்பாடு செய்தல்
- இடுகாடுகளையும் சுடுகாடுகளையும் ஏற்படுத்தி அவற்றை பேணி வருதல்
- பொதுக் கிணறுகள் தோண்டுதலும் பழுது பார்த்தலும்
- பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பேணி வருதல்
- வாகன நிறுத்தம் அமைத்தல் கால்நடைகளுக்கான தொழுவங்கள் ஏற்படுத்துதல்
- பொது இறைச்சிக் கூடங்கள் ஏற்படுத்துதல்
- பொதுப் படிப்பகங்கள் ஏற்படுத்துதல்
- தந்தி வசதிகள், விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களை நிறுவுதல்
- எழுத்தறிவு மற்றும் சமூக கல்விக்கான மையங்களை ஏற்படுத்துதல்
- குடிக்க, குளிக்க, கழுவுவதற்கான நீர் ஆதாரங்களை ஏற்படுத்துதல்
- மருந்தகங்களை நிறுவுதல்
- மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களை ஏற்படுத்துதல்
- தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்துதல்
- கொள்ளை நோய்களை தடுத்தல்
- பிறப்பு இறப்பு புள்ளி விபரங்களை பெறுவதோடு அவைகளைப் பாதுகாத்தல்
- சலவை மற்றும் குளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல்
- சாலை ஓரங்களில் ஆபத்தான கட்டிடங்கள் மற்றும் மரங்கள் இருந்தால் அவற்றை அகற்றுதல் ஆபத்துகளின்றி பாதுகாப்பு
- மதம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் நடந்தால் பொது மக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு வசதிகள்

- கட்டாய அம்மை குத்துதல் மற்றும் பெரியம்மை மற்றும் காலரா குறித்த தகவல்கள அளிப்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வளித்தல்.
- ஆபத்தான ஏரிகள், குளங்கள், கிணறுகள் மற்றும் குழிகள் குறித்த முன்னெச்சரிக்கை
- பல வகையான வரிகளை வசூலித்தல்
- 1920ஆம் ஆண்டு தொடக்கக் கல்விச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் கல்வி வரி ஊராட்சியில் உள்ள பள்ளிகளில் மேம்பாட்டிற்கு பயன்படுத்துதல்
- ஒரு இடம் அல்லது கட்டிடத்தில் நுழைவதற்கும் ஆய்வுச் செய்யவும்
- கடைகளில் உள்ள எடையையும் அதன் அளவுகளையும் சோதனையிடுதல்
- சிறிய குற்றங்களும் தண்டனைகள் அளித்தலும்-ரூ.10.00 முதல் 1000.00 வரை, ஏறக்குறைய 40 வகையான தண்டனைகள்.
- பொதுச் சொத்துகளை ஏலத்திற்கு விடுதல்-மீன் பிடி உரிமை, மரங்களை வெட்ட உரிமை.
- விளம்பரப் பலகை வைப்பதற்கான அனுமதி
- பன்றிகளை வளர்ப்பதற்கான உரிமம் அளித்தல்

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனிதவளம்)

ஊராட்சி அலுவலகம் செல்ல வாகன வசதி, தேநீர், பழங்கள், இனிப்பு பண்டங்கள் உள்ளுர் இளைஞர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பிற ஆசிரியர்கள்.



## யார் ஏற்பாடு செய்வது? எப்போது?

தலைமையாசிரியர் மற்றும் ஊராட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து மனித உரிமைக் கல்வி ஆசிரியர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்.



## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**<u>செயல்பாடு-01</u>**

**<u>படிநிலை-01 மாணவர்களை குழுவாகப் பிரித்தல்</u>**

மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு 5 மாணவர்கள் கொண்ட குழுவாகப் பிரித்து அதில் ஒருவரை பொறுப்பாளராக நியமித்து அவர் அக்குழுவை வழிநடத்தி வரலாம்.

**<u>படிநிலை-02 ஊராட்சி மன்ற அலுவலகத்தைப் பார்வையிடல் மற்றும் சந்திப்பு</u>**

- ஊராட்சி அலுவலகம் சென்றபின்பு அலுவலகத்தை முழுமையாக சுற்றி பார்த்து பின்பு தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளரை சந்தித்து தங்களைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.
- முதலில் வந்ததன் நோக்கத்தை ஆசிரியர் அல்லது மாணவர்களின் பிரதிநிதி ஒருவர் பகிர்ந்து கொள்ளலாம். அதில் மாணவர் மன்றம் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறுதல் வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர், மற்றும் உறுப்பினர்கள் தெரிவுச் செய்யப்படும் முறையை விளக்குவார்கள். ஊராட்சி மன்ற அலுவலகம் செயல்படும் முறைப் பற்றியும் விளக்குவார்கள்.

- ஊராட்சி மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை எடுத்துரைப்பர்.
- இறுதியாக மாணவர்கள் தங்களின் சந்தேகங்களை எழுப்புவார்கள். அவர்களுக்குரிய தகவல்கள் கிடைத்தவுடன் புறப்பட தயாராவார்கள்.
- ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து குழு புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.
- பார்வையிட்ட விசயத்தை பத்திரிக்கைகளுக்கு செய்தியாகக் கொடுக்கலாம்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- ஜனநாயக நிறுவனங்களுள் ஊராட்சிகள் பற்றித் தெரிந்து கொள்வார்கள்.
- எதிர்கால சிறந்த குடிமக்களாக உருவெடுப்பர்.
- ஜனநாயக ரீதியாக பங்கேற்கும் உணர்வை, மதிப்பீட்டை வளர்த்துக் கொள்வார்கள்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- உள்ளூர் இளைஞர்கள், தன்னார்வ அமைப்புகள், ஊராட்சி மன்றம்.

## தெரிந்து கொள்ள....

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு-14**

### பிரிவு-21

1. நேரிடையாகவோ, சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மூலமாகவோ, நமது நாட்டின் அரசாட்சியில் பங்கேற்கும் உரிமைகள் ஒவ்வொருக்கும் உண்டு.
2. தன் நாட்டில் அரசுப் பணிகளில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
3. மக்களின் விருப்பமே அரசதிகாரத்தின் அடிப்படையாய் அமைதல் வேண்டும். அவ்வப்போது நடைபெறும் நேர்மையான தேர்தல்களின் வாயிலாக மக்கள் விருப்பம் வெளியிட வாய்ப்பளிக்க வேண்டும். இவை எல்லோருக்குமான சம வாக்குரிமையின் அடிப்படையில், இரகசிய வாக்களிக்கும் அல்லது அதற்கீடான சுதந்திர வாக்களிப்பு வழிமுறைகளின்படி நடைபெற வேண்டும்.

### பிரிவு-4

தேர்தலில் வாக்களிக்கும், பிரதிநித்துவ அமைப்புகளில் பங்கேற்கும் வகையில் தெரிவு செய்யவும், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், பெண்கள் உரிமைப் பெறும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

### பிரிவு-225

பொது விவகாரங்களில் பங்கேற்றுக் கொள்வதற்கும், தேர்தலில் வாக்களிப்பதற்கும், தேர்தலில் தேர்வு

## இனப்பாகுபாட்டிற்கெதிரான அகில உலக உடன்படிக்கை

**பிரிவு-225(இ)**

பொது அரசியல் உரிமைகள் குறிப்பாக தேர்தலில் பங்கெடுப்பது, வாக்களிப்பது, அனைவருக்குமான சம உரிமை அடிப்படையில் அரசியலும் பொது வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஈடுபடுவது. பொதுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை.

## தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்)சட்டம்-1989

**பிரிவு-VII**

தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியின நபரை, குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்காதிருக்குமாறோ, வாக்களிக்குமாறோ அல்லது சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறோ அல்லது பிற முறையில் வாக்களிக்குமாறோ கட்டாயப்படுத்தினால் அல்லது மிரட்டினால் வன்கொடுமை.

## கிராம சபை

மக்களாட்சியின் ஆணிவேர் என்று கிராம சபையை கூறலாம். இந்தியாவின் அரசியல் சாசன அடிப்படையில் அமைக்கப்பட்ட மக்களாட்சியின் அடித்தள அமைப்பு இதுவாகும். மக்கள் தங்களை தாங்களே ஆண்டு கொள்ள வழி வகை ஏற்பட்டுள்ளது. இது இந்தியாவின் கிராமப்புற அரசாங்கம் என்று அழைக்கலாம்.

***ஏன் உள்ளாட்சி முறை?***

சமூக நீதி, பொருளாதார மேம்பாடு மற்றும் அடித்தட்டு மக்களிடையே ஜனநாயக அமைப்பைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே உள்ளாட்சி முறையின் அடிப்படை நோக்கம்.



# 03.கல்வியும், நலனும் நம் கண்கள் என்போம்



## அறிமுகம்-Introduction

ஒவ்வொரு மனிதனின் உயிர் வாழ்வதற்கான உரிமையை இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் இதர சர்வதேச சட்டங்களும் அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ளன. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளில் முக்கியமான உரிமைகள்;

உணவு, தூய குடிநீர், இருப்பிடம், தூய காற்று, சுற்றுச்சூழல், கல்வி, சுகாதாரம் மற்றும் இதர சமூக, பொருளாதார, கலாச்சார உரிமை ஆகியவையாகும். ஆனால் இன்று விளிம்பு நிலை மக்களில் அதிகம் பாதிக்கப்படும் ஒரு மிகப் பெரிய குழுவாக உள்ளவர்கள் குழந்தைகள்தாம். குழந்தைகளின் முக்கியமான பிரச்சனைகளாக விளங்குவது.

- ஊட்டச் சத்து குறைவால் ஏற்படும் குறை நோய்கள்
- கொள்ளை நோய்க்கு எளிதாக இலக்காகுதல்
- இவற்றால் குழந்தைகள் அதிகமாக எண்ணிக்கையில் இறக்கின்றனர்.

இன்று கல்வி அடிப்படை வாழ்வுரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டமாக குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் கடந்த 2010 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டம் நாம் நம் பள்ளி மற்றும் அதனைச் சார்ந்த கிராமப் பகுதியில் உள்ள குழந்தைகளின் கல்வி, சுகாதார நிலை பற்றி அறிந்து கொள்ளவும், தக்க அமைப்புகளிடம் கொண்டு சென்று வழக்காடவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அடிப்படையாக இருக்கும்.

## திட்டமிடுதல்-Planning

- மாணவர் மன்றத்தில் உள்ள மாணவர்களுக்கு மனித உரிமைகள் பற்றிய ஓரளவு புரிதல் இருக்கும் என்ற நோக்கில் குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து கருத்தமர்வு ஒன்று நடத்தலாம். அதில் உலகளவில், தேசிய, மாநில அளவில் கல்வி மறுக்கப்பட்டு கொத்தடிமைகளாக, குழந்தைத் தொழிலாளர்களாக உள்ள நிலையை விளக்கலாம்.

- குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும் அது எப்படி ஏற்படுகிறது, அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கலாம்.
- கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து தெளிவு பெற்ற பின்பு கிராமத்தில் உள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை மற்றும் தோராய மக்கள் தொகை, அதில் குழந்தைகள் தோராயமாக எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று கணக்கிட வேண்டும்.
- எத்தனைத் தெருக்கள் உள்ளன என்பதையும் கணக்கிட வேண்டும். பள்ளிக்கும் குடியிருப்புக்கும் இடையேயான தூரம் எவ்வளவு உள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.
- ஆய்வு நேரத்தில் ஏதாவது பாதிப்புகள் வருமா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக வெறிநாய்கள் உள்ளனவா?. ஆபத்தான கிணறுகள், குளங்கள், மின் கம்பிகள், ஓடைகள், நெரிசலான போக்குவரத்து உள்ள சாலை போன்றவை உள்ளனவா? என்றும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- ஆய்வுக்கான தகவல்களை கிராம உள்ளாட்சி மன்றத்திடம் கேட்டுப் பெறலாம். அவர்களின் முழுமையான ஒத்துழைப்பையும் கோரலாம்.
- இந்த ஆய்வை மேற்கொள்ள உள்ளூர் இளைஞர்கள், பள்ளியில் உள்ள மூத்த மாணவர்கள் ஆகியோரின் உதவியை நாடலாம்.

## ஆய்வில் நாம் காண்பது என்ன?

**கல்வி**

- பள்ளி செல்லும் குழந்தைகள்–ஆண், பெண், வகுப்பு வாரியாக.
- பள்ளி செல்லாத குழந்தைகள்–ஆண், பெண், வயது வாரியாக.
- இடை நின்றலுக்கான காரணங்களைக் கண்டறிக.
- அரசுப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள்
- தனியார் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள்.
- குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளனவா? (18 வயதிற்குட்பட்டவர்கள் குழந்தைகள்)
- குழந்தைத் தொழிலாளர்கள் யாரேனும் உள்ளனரா?
- பெண் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்கின்றனரா? விபரம் சேகரிக்கவும். அவ்வாறு இல்லையெனில் காரணங்களை அறிக.
- குழந்தைகள் கல்வியின் தரம்–வாசித்தல், எழுதுதல், கணக்கு போடுதல்–பின்னிணைப்பு காண்க.
- தனித் திறமைகளைப் பட்டியல் இடுக.
- எதிர்கால கனவுகளைப் பட்டியல் இடுக.

## சுகாதாரம்

- அனைத்துச் குழந்தைகளுக்கும் தடுப்பூசி முறையாகப் போடப்படுகிறதா?
- கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு பொதுவாக வரும் நோய்கள் பற்றிக் கேட்டறிக.

- உடல், மன ரீதியான குறைபாடுகள் உள்ள குழந்தைகள், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் அவர்களுக்கான கல்வி நிலைப் பற்றி கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.
- ஊட்டச் சத்து இல்லாத குழந்தைகள் உள்ளனரா என்பதைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.
- பள்ளியில் வருடாந்திர மருத்துவ ஆய்வு மற்றும் அதன் தொடர்ச்சியாக மருத்துவ வசதிகள் செய்யப்படுகிறதா என்பதை ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளின் விபரங்களைச் சேகரிக்கவும்.
- பள்ளியில் முதலுதவி சாதனங்கள் உள்ளனவா? முதலுதவி குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளதா?


## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

உள்ளூர் இளைஞர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள், வெள்ளைத் தாள்கள், எழுது பொருட்கள்.



## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

தலைமையாசிரியரிடம் தக்க ஆலோசனை பெற்று மனித உரிமைக் கல்வி ஆசிரியர் ஏற்பாடு செய்ய வேண்டும். விடுமுறை தினத்தில் ஆய்வு செய்தால் நலமாக இருக்கும். அனைவரும் வீட்டில் இருப்பார்கள். அதனால் தகவல்கள் முழுமையாக கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.



## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

### செயல்பாடு-01

#### படிநிலை-01-மாணவர்களைக் குழுவாக பிரித்தல்

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கும் போது ஆண் பெண் குழந்தைகள் சரிசமமாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு பணிக் குழுவிற்கும் ஒரு பொறுப்பாளரை நியமிக்க வேண்டும். இதில் ஆண் பெண் சரிநிகராக இருக்க வேண்டும்.

#### படிநிலை-02-கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்லுதல்

- அனைவரும் கிராமத்தின் மையப் பகுதிக்கு செல்ல வேண்டும். மொத்தம் எத்தனை தெருக்கள் உள்ளன என்பதை பார்த்து அதற்கேற்ப குழுக்களுக்குத் தெருக்களை ஒதுக்க வேண்டும். ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### செயல்பாடு-02

#### படிநிலை-01-ஆய்வைத் துவக்குதல்

- மாணவர்கள் தங்கள் ஆய்வைத் துவக்குவார்கள். ஒவ்வொரு வீடாகச் சென்று ஆய்வு செய்வார்கள்.

- 1 முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விபரங்களை இணைப்பில் உள்ள படிவத்தின் படி தகவல்களைச் சேகரிப்பார்கள்.
- தகவல் சேகரிக்கும் போது தாங்கள் யார் என்பதை தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக மனித உரிமை மாணவர் மன்றத்தைப் பற்றி தெளிவாகக் கூற வேண்டும். இதன் மூலம் தங்களுக்கு என்ன நம்மை ஏற்படும் என்பதையும் கூற வேண்டும்.
- அனைவரும் தாங்கள் கேட்டவுடன் அனைத்துத் தகவல்களையும் தருவார்கள் என்று நம்ப வேண்டாம். சிலர் உங்களை உதாசீனப்படுத்தலாம் அவைப் பற்றிக் கவலைப்படாமல் நாம் நம்முடைய ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.
- ஆய்வுப் படிவத்தில் முதலில் பென்சிலில் எழுதிக் கொள்ளலாம். அதன் பின்பு தெளிவாக தவறுகள் இல்லாமல் எழுதலாம்.

**படிநிலை-02-தகவல்கள் தொகுப்பு மற்றும் அறிக்கை தயார் செய்தல்**

- ஆய்வு செய்த தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவைகளைப் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தலாம். உதாரணத்திற்கு மாணவர்கள் வயது வாரியாக, படிக்கும் வகுப்பு, பள்ளி செல்லா குழந்தைகள், அவர்களில் ஆண் பெண் எண்ணிக்கை மற்றும் காரணங்களை கண்டறிய வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் ஆகிய தகவல்களைச் சேகரிக்கலாம்.
- அதே போல் சுகாதாரம் குறித்த தகவல்களையும் பெறலாம். குறிப்பாக கிராமத்தில் குழந்தைகளுக்கு பொதுவாக வரும் நோய்கள் பட்டியலிடுக.
- முறையாக தடுப்பூசிகள் போடுகிறார்களா என்பதைப் பட்டியில் தயார் செய்யுங்கள்.
- மாற்றுத் திறனுடைய குழந்தைகள் உள்ளனரா? இருப்பின் எம்மாதிரி என்பதை தகவல்களைச் சேகரிக்கவும்.
- இரத்த சோகையில் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளின் விபரங்களைச் சேகரிக்கவும்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- குழந்தைகளின் கல்வி, சுகாதாரத்தில் தங்கள் கிராமத்தின் நிலவரம் குறித்து என்ன என்பதை அறிந்து கொள்வார்கள்.
- மாணவர்களிடம் ஆய்வு மனப்பாங்கு வளரும்.
- உரியோரிடம் கொண்டு செல்ல மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த அடிப்படை ஆவணமாக அமையும்.
- மாணவர்களிடம் குழுவாகச் செயற்படும் உணர்வு உருவாகும்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

உள்ளூர் இளைஞர்கள், மூத்த மாணவர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மனித உரிமைக் கல்வி மாணவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள்.

கல்வி, சுகாதாரம் குறித்து மாணவர்கள் முழுமையாக உணர இந்த ஆய்வு அடிப்படையாக இருக்கும். இது முழுமையாக ஆய்வு இல்லையென்றாலும். ஆய்வு மனப்பாங்கை ஏற்படுத்தவே இந்த ஆய்வு. எதிர்காலத்தில் சிறந்த மாணவர்களாக விளங்க மாணவர் மன்றத்தின் இச்செயல்பாடுகள் ஒரு சிறிய பொறியாக இருக்கும்.

மாணவர்கள் ஆய்வை சிறப்பாக கொண்டுச் செல்லும் வகையில் அவர்களுக்குரிய அனைத்து வகை ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். குறிப்பாக உள்ளூர் இளைஞர்கள், தன்னார்வ அமைப்புகள், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவை கோருதல்.

ஆய்வு நேரத்தில் குழந்தைகளுக்குத் தேவையான பென்சில் போன்ற எழுது பொருட்களும் இடையே இளைப்பாற தேநீர் மற்றும்சில நொறுக்குத் தீனிகளை ஏற்பாடு செய்யலாம்.



## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

**பிரிவு–21(A)**

அரசு 6 முதல் 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, தரமான கல்வியை அளிக்க வேண்டும்.

**பிரிவு–24**

14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும், சுரங்கத்திலும், பிற அபாயகரமான தொழிலிலும் ஈடுபடுத்தக் கூடாது.

## அகில உலக மனித உரிமைப் பிரகடனம்–1948

**பிரிவு–26**

1. கல்விபெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆரம்ப மற்றும் அடிப்படை நிலைகளிலாவது கல்வி இலவசமாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்க வேண்டும். தொழில் நுட்பம் மற்றும் தொழில் முறைக் கல்வியை பரவலாக்குவதோடு, உயர் கல்வியை அனைவருக்கும் தகுதி அடிப்படையில் சம வாய்ப்பிற்குரியதாக்க வேண்டும்.
2. மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமையை, அடிப்படை சுதந்திரங்களின் பால் மதிப்பை வலுப்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். தேசங்கள், மரபின அல்லது சமயக் குழுக்களிடையே நல்லிணக்கத்தையும், சகிப்புணர்வையும், நட்புணர்வையும் வளர்க்க வேண்டும். குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியை தேர்வு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

**பிரிவு-13(2)**

அ. ஆரம்பக்கல்வி அனைவருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைக்க வேண்டும்.

ஆ. தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி கல்வி உள்ளிட்ட பல வடிவங்களில் உள்ள இடைநிலைக் கல்வி அனைவருக்கும் எளிதாகவும், குறிப்பாக இலவசமாக கிடைக்க வேண்டும்.

இ. உயர்கல்வியும் தகுதியின் அடிப்படையில் அனைவருக்கும் எளிதாகவும் இலவசமாகவும் கிடைக்க வேண்டும்.

ஈ. ஆரம்ப நிலை கல்வி பெறாதவர்களுக்கும், ஆரம்பக்கல்வி முழுமையான முடிக்காதவர்களுக்கும் அடிப்படைக் கல்வி கற்க தீவிரமாக ஊக்கப்படுத்த வேண்டும்.

உ. ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் உயர்நிலை போன்ற அனைத்து நிலைகளிலும் கல்விக் கூடங்கள் நிறுவுவதற்கான முயற்சிகள், போதிய படிப்புதவி முறையினை உருவாக்கவும், ஆசிரியர்களின் பணி நிலையினை தொடர்ந்து மேம்படுத்தவும் முயற்சிகளை சீரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். அரசினால் நிறுவப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களைத் தவிர, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களிலும் தங்களுடைய குழந்தைகளைச் சேர்த்து படிக்க வைப்பதற்கான சுதந்திரம், பெற்றோர்களுக்கும் சட்டப்பூர்வமான காப்பாளர்களுக்கும் உண்டு.

## பிரிவு-12-நலவுரிமைகள் பாடம் நான்கில் காண்க

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

**பிரிவு-06**

ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமை உண்டு.

**பிரிவு-24**

ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான உடல் நலத்தை அனுபவித்திட உரிமை உண்டு. உடல் நலம் என்பது சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் உள்ளடக்கியது.

- அரசு குழந்தை மரணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- ஊட்டச்சத்துக் குறைவையும் நோய்களையும் எதிர்த்திடப் போதுமான சத்தான உணவையும் தூய குடிநீரையும் வழங்கிட வேண்டும்.
- தாய்மார்களுக்கு கர்ப்பக்காலத்திலும் பிரசவத்திற்குப் பின்பும் தேவையான நலபாதுகாப்புக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பிரிவு-28**

- ஒவ்வொரு குழந்தைக்கும் சம வாய்ப்பின் அடிப்படையில் ஆக்க பூர்வமான, முன்னேற்றகரமான முறையில், கட்டாய, இலவச, தரமான கல்விக்கான உரிமையுண்டு.

- எந்தவொரு குழந்தைக்கும் பல்வேறு வகையான தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்நிலைக்கல்விக்கான வாய்ப்புகள் எளிதில் கிட்டக்கூடியதாய் இருக்கும்படி செய்தல் மற்றும் தேவைப்பட்டோருக்கு கல்வி பயில்வதில் நிதியுதவி அளித்திடவும் வேண்டும்.
- குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனிமனித ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் மனரீதியான திறமைகள் அவற்றின் முழுவீச்சும் வெளிப்படும் அளவிற்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்ப மற்றும் நவீன கற்பித்தல் முறைகளை பெற்றிட வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

### பிரிவு-32

பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்தும், அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படுதலிலிருந்தும் குழந்தைகளின் உடல், மன, ஆன்ம, ஒழுக்க மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்த ஒரு வேலையைச் செய்வதிலிருந்தும் பாதுகாப்புப்பெற உரிமையுண்டு.

### பிரிவு-34

எல்லா வகையான பாலியல் சுரண்டல்களிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.


## பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை-1979

### பிரிவு-10


ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துவகை கல்வியைப் பெறவும், கல்விக்கான வாய்ப்புகளை பெறவும் உரிமையுண்டு. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கல்வி பெறவும் உரிமை உண்டு.

### பிரிவு-12

பெண்களின் நல உரிமைகளைப் பாதிக்கும் வகையில் எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது.



# 04.சுத்தம் சுகம் தரும்–நம்ம ஊரு அனுபவம்



## அறிமுகம்–Introduction

பொதுச் சுகாதாரம் என்பது மக்கள் அனைவரின் அடிப்படை நலவுரிமையாகும். பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படும் போது அது அனைத்து மக்களையும் பாதிக்கிறது. பல வகையான கொள்ளை நோய்க்கும் நீர், காற்று மூலம் பரவும் நோய்களுக்கு காரணமாகிறது. ஒரு நாகரிகமான சமூகம் என்பதற்கு அடையாளம் பொதுச் சுகாதாரத்தை செம்மையாக பேணுவதேயாகும்.

இந்த ஆய்வில் தம்முடைய கிராமம் பொதுச் சுகாதாரத்தில் எந்த அளவு உள்ளது என்பதை அறிந்து கொள்ளும் வகையில் அமைவதோடு எதிர்காலத்தில் பொதுச் சுகாதாரத்தை பேணுவதில் மாணவர்கள் அக்கறை கொள்ளும் வகையில் அமையும்.

## திட்டமிடுதல்–Planning

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் பொது சுகாதாரத்தை பற்றி குழந்தைகளிடம் விளக்கம் அளிக்க வேண்டும். பொதுச் சுகாதாரம் என்றால் என்ன என்பதையும், பொதுச் சுகாதாரம் பாதிக்கப்பட்டால் எம்மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்பதையும் விளக்க வேண்டும்.
    - உதாரணத்திற்கு காலரா வந்தால் ஏன் ஊரை சுத்தம் செய்து மஞ்சள் தண்ணீர் தெளித்து வேப்பிலை கட்டுகிறார்கள் என்பதை விளக்கலாம்.
    - நீர் மாசுபட்டால் எம்மாதிரியாகப் பாதிப்புகள் ஏற்படும் என்பதை விளக்கலாம்.
    - தொற்று நோய்கள் எவ்வாறு பரவுகிறது என்பதை விளக்கலாம்.
- கிராம பொது சுகாதாரம் பற்றிய ஆய்வை நேரடியாக உற்று நோக்குதல், பேட்டி, கலந்துரையாடல் போன்ற முறைகளைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரிக்கலாம்.
- கிராம ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் உதவியை நாடலாம்.

## பொது சுகாதார ஆய்வில் நாம் அறிவது என்ன?

- பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறதா? எங்கிருந்து வருகிறது. (ஆற்று நீர் குழாய் வழியாக, குளத்து, கிணறு, அடிபம்பு). நீரின் நிறம் எவ்வாறு உள்ளது. நீரின் சுவை எப்படி உள்ளது. கழிவு நீர் ஏதாவது கலந்துள்ளதா?

- அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி உள்ளதா? அல்லது திறந்த வெளியை கழிப்பறையாகப் பயன்படுத்துகின்றனரா? சாலையோரம் மலம் கழிக்கின்றனரா? அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி தெரியுமா? எம்மாதிரியான தொற்று நோய்கள் ஏற்படும் என்பதையும் சேகரிக்க வேண்டும்.
- கழிப்பறை இல்லாததற்கு கூறும் காரணங்களைப் பெறுக. வளர்ச்சித் துறையும் கிராம ஊராட்சிகள் வழியாக மானிய விலையில் கழிப்பறை கட்ட நிதி ஒதுக்குவது பற்றி தெரிந்துள்ளனரா?
- கிராமத்தில் பொது இடங்களில் பொதுக் கழிப்பறை வசதிகள் உள்ளதா?
- சாலைகள் சுகாதாரமாக உள்ளனவா? அல்லது அசுத்தம் செய்யப்பட்டுள்ளதா? எம்மாதிரியான அசுத்தம் என்பதை உற்று நோக்கித் தகவல்கனை சேகரிக்கவும்.
- கழிவு நீர் செல்ல போதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது சாலையிலேயே தேங்கியுள்ளதா?
- மழை நீர் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா அல்லது சாலையிலேயே தேங்கியுள்ளதா?
- கிராமத்தில் கொசு உள்ளதா? அதனால் எம்மாதிரியான தோற்று நோய்கள் ஏற்படுகின்றன?
- ஊராட்சி சார்பில் சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா? அவர்கள் முறையாக சுகாதார பணிகளைச் செய்கின்றனரா?
- அருகில் உள்ள மருத்துவமனை, சுகாதார நிலையம், அவை எவ்வளவு தொலைவில் உள்ளன?
- உங்கள் ஊரிலேயே படித்த செவிலியர் இருந்தால் அவர்களின் விபரங்கள்.
- ஆங்கில மருத்துவம் அல்லாத பிற மருத்துவ முறைகள் பயன்பாட்டில் உள்ளதா? (சித்தா,யுனானி, ஓமியோபதி, அக்குபஞ்சர், நாடி வைத்தியம் இன்னும் பிற)
- உள்ளூர் நாட்டு மருத்துவர்கள் அவர்கள் குணப்படுத்தும் நோய்கள்.
- அருகில் உள்ள மருந்து கடை எது?
- 108 அவசர ஊர்தி பற்றி அறிந்துள்ளனரா?
- விஷக் கடிக்கான மருந்து எங்கு கிடைக்கும், உடனடியாகச் செய்ய வேண்டிய தடுப்பு முறைகள் பற்றித் தெரியுமா?
- மருந்தாகக் கூடிய உணவுகள் என்ன என்பதை ஊரில் உள்ளவர்களிடம் கேட்டு பட்டியலிடுங்கள்.
- கிராமத்தில் பொதுவாக ஏற்படும் நோய் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவும்.
- கிராமத்தில் நீண்ட நாள் நோய்வாய்பட்டவர்களின் விபரம். எத்தகைய நோய் என்பதையும் சேகரிக்கவும். அவை தொற்று நோயா அல்லது குறை நோயா என்பதையும் கண்டறியவும்.
- கிராமத்தில் உள்ள முதியோர் விபரம்-ஆண், பெண்-வயது வாரியாக.


## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

உள்ளூர் இளைஞர்கள், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள், வெள்ளைத் தாள்கள், எழுது பொருட்கள்.



## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

தலைமையாசிரியரிடம் தக்க ஆலோசனை பெற்று மனித உரிமைக் கல்வி ஆசிரியர் ஏற்பாடு செய்ய வேண்டும். விடுமுறை தினத்தில் ஆய்வு செய்தால் நலமாக இருக்கும். அனைவரும் வீட்டில் இருப்பார்கள். அதனால் தகவல்கள் முழுமையாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.



## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

### செயல்பாடு-01

#### படிநிலை-01-மாணவர்களைக் குழுவாக பிரித்தல்

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கும் போது ஆண் பெண் குழந்தைகள் சரிசமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளல் அவசியம்.
- ஒவ்வொரு பணிக் குழுவிற்கும் ஒரு பொறுப்பாளரை நியமிக்க வேண்டும். இதில் ஆண் பெண் சரிநிகராக இருக்க வேண்டும்.

#### படிநிலை-02-கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்லுதல்

- அனைவரும் கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்ல வேண்டும். மொத்தம் எத்தனை தெருக்கள் உள்ளன என்பதை பார்த்து அதற்கேற்ப குழுக்களுக்கு தெருக்களை ஒதுக்க வேண்டும். ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### செயல்பாடு-02

#### படிநிலை-01-ஆய்வை துவக்குதல்

- தகவல் சேகரிக்கும் போது தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக மனித உரிமை மாணவர் மன்றத்தை பற்றித் தெளிவாக கூற வேண்டும். இந்த ஆய்வு மூலம் தாங்களுக்கு என்ன நம்மை ஏற்படும் என்பதையும் கூற வேண்டும்.
- மாணவர்கள் தங்கள் ஆய்வைத் துவக்குவார்கள். முதலில் தெருக்களுக்குச் சென்று அவை எவ்வாறு உள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்.
- பொதுக் குடிநீர் பிடிக்கும் இடத்தில் உள்ள நீரை பார்த்து அது எப்படி உள்ளது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்
- இறுதியாகப் பொதுமக்களிடம் தங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கேட்டு பெறலாம்.

- அனைவரும் தாங்கள் கேட்டவுடன் அனைத்து தகவல்களையும் தருவார்கள் என்று நம்ப வேண்டாம். சிலர் உங்களை உதாசீனப்படுத்தலாம் அதைப்பற்றிக் கவலைப்படாமல் நாம் நம்முடைய ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.
- ஆய்வுப் படிவத்தில் முதலில பென்சிலில் எழுதிக் கொள்ளலாம். அதன் பின்பு தெளிவாக தவறுகள் இல்லாமல் எழுதலாம்.

## செயல்பாடு-03

**படிநிலை-01-ஆய்வறிக்கை தொகுப்பு**

- தாங்கள் பார்த்த, கேட்ட மற்றும் உற்று நோக்கிய தகவல்களை அறிக்கையாகத் தொகுக்க வேண்டும்.
- தொகுத்த அறிக்கையிலிருந்து தாங்கள் கண்டறிந்தவைகளை அடிப்படையாக வைத்து தங்களுடைய பரிந்துரைகளை அளிக்கலாம்.
- முதலில் நாம் என்ன செய்யலாம் என்பது பற்றியும். தம் பள்ளி மாணவர்கள் அனைவரும் மேற்கண்ட பரிந்துரைகளை அறிந்து கொள்ளும் வகையிலும் பள்ளியில் காலை வழிபாட்டு நேரத்தில் பகிர்ந்து கொள்ளலாம்.

## எதிர்பார்க்கும்-Expected outcome

- மாணவர்கள் பொதுச் சுகாதாரம் பற்றி அறிந்து கொள்வார்கள்.
- பொதுச் சுகாதாரத்தில் நம் கிராமத்தின் நிலை என்ன என்பதை உணர்ந்து கொள்வார்கள்.
- பள்ளி அளவில், கிராம அளவில் பொதுச் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு ஏற்படும்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

உள்ளூர் இளைஞர்கள், மூத்த மாணவர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மனித உரிமைக் கல்வி மாணவர்கள், கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள்.

**மனித உரிமைக் கல்வி ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், நெறியாளர்களுக்கான வழிகாட்டி-Guide for HRE Teachers, Coordinators and Facilitators.**

## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

**பிரிவு-15(2)**

- கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவு விடுதி, பொது மக்கள் பொழுதுபோக்கிற்கான இடங்கள் ஆகிய இடங்களில் அனுமதிப்பதற்கும்.
- கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொது மக்களின் பயன்பாட்டிற்காக அரசு நிதியுடன் பராமரிக்கப்படும் பொது மக்கள் கூடுகின்ற இடங்களைப் பயன்படுத்துவதற்கும்.
- மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனையும் கட்டுப்படுத்தவோ அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தவோ கூடாது.

**பிரிவு-03**

- உயிருக்கும், சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

**பிரிவு-25**

- குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் பேணும் வகையில் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி, அவசியமான சமூகப் பணிகள் ஆகியவற்றுக்கான உரிமையும், வேலையின்மை, நோய், இயலாமை, கைம்மை நிலை, முதுமை, வாழ்வதற்கான வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கான உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

**விதி-24-மூன்றாவது பாடத்தில் உள்ளதைக் காண்க.**

**விதி-27**

குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை கருதி குழந்தைகளின் தரமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

## குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை

**பிரிவு-7**

மனிதத் தன்மையற்ற மற்றும் தரம் தாழ்ந்த நடவடிக்கைகளுக்கு எதிரான உரிமை.

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

**பிரிவு-12**

அ. இறந்து பிறக்கும் குழந்தைகளின் விகிதத்தையும் குழந்தை இறப்பு விகிதத்தையும் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் குழந்தை ஆரோக்கியமான வளர்வதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

ஆ. சுற்றுப்புறச் சூழலையும், தொழிற்சாலைகளையும் சுகாதாரமான முறையில் மேம்படுத்த வேண்டும்.

இ. தொற்றிக் கொள்ளக்கூடிய, குறிப்பிட்ட இடத்தில் மக்களுக்கு தோன்றக் கூடிய, தொழில் சார்ந்த மற்றும் பிற நோய்களை தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் சிகிச்சை அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஈ. நோய்வாய்ப்பட்டிருக்கும் சமயத்தில் மருத்துவ சேவை அனைவருக்கும் கிடைப்பதற்கான நிலையினை உருவாக்க வேண்டும்.

## தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம்-1989

### பிரிவு-02

தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினர் நபருக்கு உடல்ஊறு, அவமதிப்பு, அல்லது தொல்லை விளைவிக்கும் கருத்துடன் அவரது இருப்பிடத்தில் அல்லது அதன் அருகாமையில் மலம், கழிவுப் பொருட்கள், இறந்த விலங்குகள், அருவருப்பான பிற பொருட்கள் எதனையும் கொட்டினால் குற்றம்.



# 05. மக்கள் நலத்திட்டங்களும் கிராம முன்னேற்றமும்



## அறிமுகம்-Introduction

இந்தியா ஒரு ஜனநாயக, குடியரசு நாடு. மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசுதான் நல்ல அரசாக இருக்கும். அவ்வகையில் மக்களின் நலனை மையப்படுத்திப் பல மக்கள் நல திட்டங்கள் மைய, மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. யாரல்லாம் விளிம்பு நிலையில் வாய்ப்பற்ற நிலையில் உள்ளனரோ அவர்களை மையப்படுத்தி அவர்களின் வாழ்நிலையை மேம்படுத்தவே மக்கள் நல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் மூலமே சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் நீங்கி சமத்துவமான சமூகமாக இருக்கும்.

பெரும்பாலான நலத்திட்டங்கள் கீழ்க்கண்ட மக்களை இலக்காக வைத்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- பொருளாதார ரீதியாக ஏழைகள்
- வேலைவாய்ப்பற்றவர்கள்
- பட்டியல் இனத்தவர்கள்
- பட்டியல் பழங்குடியினர்
- பெண்கள்
- குழந்தைகள்
- மாற்றுத் திறனாளிகள்
- பேரிடர் பகுதியில் வாழ்பவர்கள்

மக்கள் நல திட்டங்கள் பெரும்பாலும் மாநில அரசின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதிலும் குறிப்பாக நம் உள்ளூர் அரசாங்கமான கிராம ஊராட்சியின் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல வகையான நன்மைகள் இருந்தாலும் பல நேரங்களில் திட்டமிட்டப்படி பயனாளிகளுக்குச் செல்வது இல்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இந்த அத்தியாயத்தில் நம் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நல திட்டங்களை அறிந்து கொள்வதோடு அவை எவ்வகையாக இலக்கை கொண்டுள்ளது என்பதை தெரிந்து கொள்வதுதான் இதன் நோக்கம்.

## திட்டமிடுதல்-Planning

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர், மாணவர் மன்ற கூட்டத்தில் மக்கள் நலனுக்காக அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் பற்றித் தெளிவாகக் கூற வேண்டும். இறுதியாக மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமாகக் கூற வேண்டும்.
- முதலில் கிராம ஊராட்சி அலுவலகத்திற்குச் சென்று என்னென்ன மக்கள் நலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அந்தத் திட்டங்கள் எங்கு நடைபெறுகிறது என்ற தகவலையும் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்.
- மக்கள் நலத்திட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தெரிந்து கொள்ள முறையாக கிராம ஊராட்சித் தலைவரிடம் அனுமதி கோரலாம். அனுமதி பெற்ற பின்பே அப்பகுதிகளை பார்வையிடலாம்.
- ஒரு குறிப்பிட்ட நாளை தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்று முடிவு செய்யுங்கள். அந்த நாளில் காலையில் மாணவர்கள் பள்ளியில் கூடி மக்கள் நலத்திட்டங்கள் நடைபெறும் பகுதிகளை பார்வையிடச் செல்லுதல்.
- குழந்தைகளின் பாதுகாப்பு மிக முக்கியம். அதனால் பாதுகாப்பு முறைகளை கூறுவதோடு கண்காணிக்கவும் வேண்டும்.
- பணி செய்யும் இடத்தில் அனைவரும் அமைதியாக உற்று நோக்குவதோடு தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ஒருவர் ஒருவராகக் கேட்க வேண்டும்.
- பணி செய்யும் இடங்களில் கூச்சல், சத்தம் போடக் கூடாது என்று கூறலாம்.

## மக்கள் நலத்திட்டங்கள்

மக்களின் நலனை மையப்படுதி மைய, மாநில அரசுகள் பல திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவ்வகையில் கீழ்க்கண்ட திட்டங்கள் தங்கள் பகுதியில் நடைமுறைப்படுத்தி வரலாம். அவைகளைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம்-(MGNREGS)

2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உத்தரவாத சட்டம் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாத திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படலாம். இதன் அடிப்படை நோக்கம்:-

- கிராமப்புற ஏழை மக்கள் தாம் வாழும் பகுதியில் வாழ்வாதாரம் இன்றி வேறு பகுதிகளுக்கு/ நகரங்களுக்கு இடம்பெயர்ந்தலைக் குறைக்க.
- உடல் உழைப்பை மட்டும் மூலதனமாக கொண்ட குறிப்பிட்ட திறன் பெறா தொழிலாளிகளுக்கு நூறு நாட்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கல்

**<u>பணிகள்</u>**

o புதிய குளங்கள், குட்டைகள் வெட்டுவது

o ஏரிகள், குளங்களை தூர் வாருதல் மற்றும் பலப்படுத்துதல்

o கால்வாய்களைச் சீர்படுத்துதல் மற்றும் புதியதாக வெட்டுதல்

- வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- காடு வளர்ப்பு, மரம் வளர்ப்பு
- புதிய சாலைகளை போடுதல், பராமரித்தல்-இயந்திரம் இல்லாமல்
- இந்தப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு தமிழகத்தில் ஒரு நாளைக்கு ரூ.100 வீதம் ஊதியம் அளிக்கப்படுகிறது.
- பெரும்பாலான பணிகள் கிராம ஊராட்சியின் வழியாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- அதே கிராமத்தில் 18 வயது பூர்த்தியடைந்து வசிப்பவர்களே இத்திட்டத்தில் சேர தகுதியுடையவர்கள்.
- பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். 3 இல் ஒரு பாகம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்க வேண்டும். உடனடியாக வேலையும் வழங்க வேண்டும்.
- வேலை வழங்கவில்லையெனில் சட்டப்படி வேலையின்மைக்கான படியை தினமும் வழங்க வேண்டும்.
- பணிகள் 5 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
- ஒப்பந்தகாரர்கள் மற்றும் இயந்திரம் பயன்படுத்தக் கூடாது.

## முழு சுகாதாரத் திட்டம்-Total Sanitation Campaign-TSC

கிராம சுகாதார திட்டத்தின் அடிப்படை நோக்கம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை ஒழித்து கிராம சுகாதாரத்தை மேம்படுத்துதல். அனைத்து குடியிருப்புகளுக்கும் போதிய நீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தல் மற்றும் தன்சுத்தம், சுகாதாரத்தை பேணுவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது. இத்திட்டம் 2012 வரை நடைமுறைப்படுத்தப்படும்.

**பணித் தளங்கள்**

அனைத்து கழிப்பறை இல்லா குடியிருப்புகள், பள்ளிகள், அங்கன்வாடிகள்

**பொது இடங்கள்**

- திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடுத்தல். அதனால் நீர் மற்றும் உணவு அசுத்தம் அடைந்து நோய் பரவுவது தடுக்கப்படும்.
- கழிப்பறை மற்றும் சுகாதாரத்தை பேண புதிய யுக்திகள், தொழில் நுட்பங்களை பயன்படுத்ததல்.
- உலர் கழிப்பறைகளை அகற்றுதல்
- கையால் மலம் அள்ளுவதை அறவே ஒழிப்பது

**புது வாழ்வு திட்டம்**

உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் திட்டமாகும். இதற்கு முன்பு இது வாழ்ந்து காட்டுவோம் என்ற பெயரில் இருந்தது தற்போது புது வாழ்வு திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏழைகளிலேயே ஏழைகளின் வாழ்வு முன்னேற்றம் பெற Community Based Organization-களை கட்டமைத்து பணிகளைக் கொண்டு செல்லப்படுகிறது. குறிப்பாகப் பெண்களின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதுடன் வளர்ச்சியிலும் பங்கு பெற வைத்தல்.

- சமூக அடிப்படையான அமைப்புகளிடம் முடிவெடுக்கும் ஆற்றலை ஊக்குவிப்பது.
- ஏழைகளுள் மிகவும் ஏழைகளுக்கு முன்னுரிமை அளிப்பது. குறிப்பாகப் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள்.
- கிராம ஊராட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுதல்
- வாழ்வாதாரம் சாந்த பயிற்சிகள் மற்றும் தொழிலில் ஈடுபட வைத்தல்.
- அனைத்துக் கிராமங்களிலும் கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும்.
- சமூகத் தணிக்கை குழு, சுய உதவிக் குழு, சமுதாய வாழ்வாதார குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவற்றை ஏற்படுத்துவது.
- வறுமை மற்றும் வறுமை ஒழிப்பு திட்டம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
- சிறிய அளவிலான நிதியுதவிகள், வேலைவாய்ப்புக்கு ஏற்ற பயிற்சிகள், உள்ளூரிலேயே வாழ்வாதாரத்திற்கான வேலைகளை உருவாக்குவது.

## இந்திரா அவாஸ் யோஜனா

இந்திரா அவாஸ் யோஜனா என்ற இந்திரா நினைவு தொகுப்பு வீடு திட்டம் 1996 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர், பட்டியல் சாதி அல்லாத பிற வகுப்பினரில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும்.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வளர்ச்சி பணிகள் செய்யப்படுகிறது. அவருடைய தொகுதியில் மட்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலவை உறுப்பினர் என்றால் மேலும் சில தொகுதிகளிலும் செயல்படுத்தலாம்.

**இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள்**

- குடிநீர் வசதி
- பள்ளிகள்
- பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவம்
- சாலை வசதிகள்
- 15 சதவீத நிதி பட்டியல் சாதியினருக்கு ஒதுக்கப்படும்.
- 7.5 சதவீத நிதி பட்டியல் பழங்குடியினருக்கு ஒதுக்கப்படும்.
- பட்டியல் பழங்குடியினர் இல்லாத பட்சத்தில் பட்டியல் சாதியினருக்கு ஒதுக்க வேண்டும்.
- இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் செய்ய ஒதுக்கலாம்.
- பசுமை வீடுகள் திட்டம்

- தமிழக அரசால் நடைமுறைப்படுத்தும் திட்டமாகும். கிராமப்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை குடும்பங்களுக்கான திட்டமாகும். சுற்றுச்சூழலுக்கு கேடு ஏற்படாத வகையில் சூரிய சக்தி மூலம் விளக்கு எரிக்க மற்றும் இதர பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

## மேலும் சில திட்டங்கள் உள்ளன. அவை

- பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா-**Pradhan Mantri Gram Sadak Yojana (PMGSY)**
    - கிராமப்புறச் சாலை மேம்பாட்டிற்காக...
- தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுத் திட்டம். (மகளிர் திட்டம்) Tamil Nadu Women's Development Project (Mahalir Thittam)
- Tamil Nadu Village Habitations Improvement (THAI) Scheme.
- KISHORI SAKTHI YOJANA-வயது வந்த பெண்களுக்கான வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தொழில் பயிற்சிகள்.

மேலும் பல துறை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்கள் உள்ளன.

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

- உள்ளூர் இளைஞர்கள், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள்.
- வெள்ளை தாள்கள், எழுது பொருட்கள்.



## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

தலைமையாசிரியரிடம் தக்க ஆலோசனை பெற்று மனித உரிமைக் கல்வி ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம்.



## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**<u>செயல்பாடு-01</u>**

**<u>படிநிலை-01-மாணவர்களைக் குழுவாக பிரித்தல்</u>**

மாணவர்களைக் குறைந்தபட்சம் 5 பேர் அல்லது 10 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட பின்பு அவர்களுக்கான அலுவலகம் மற்றும் சந்திக்கும் நபர்களின் தகவல்களைத் தெரிவிக்கலாம்.

கீழ்க்கண்ட அலுவலகத்தில் அல்லது நபர்களிடம் அரசின் நல திட்டங்களைப் பற்றிய தகவல்களை கோரலாம்.

1. கிராம ஊராட்சி மன்ற அலுவலகம்.
2. கிராம நிர்வாக அலுவலகம்
3. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்
4. மகளிர் சுய உதவிக் குழுக்கள்

5. அரசின் சிறப்புத் திட்ட அலுவலகங்கள்
6. வேளாண்மை விரிவாக்க அலுவலகம்
7. கிராம கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கி

## படிநிலை-02-அலுவலர்கள் சந்திப்பு

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் தலைமையாசிரியருடன் கலந்து பேசி நலத் திட்டங்கள் குறித்து அலுவலர்கள் மற்றும் பணி நடைபெறும் இடத்தை நேரடியாக பார்வையிட தக்க தேதியை உறுதிச் செய்வார்.
- பார்வையிட செல்லும் அலுவலகத்திற்கு முன்கூட்டியே அனுமதி பெற கடிதம் அனுப்ப வேண்டும் அல்லது தொலைபேசி மூலம் உரிய நபர்களிடம் பேசி அனுமதி பெற வேண்டும்.
- அனுமதி பெற்ற பின்பு அவர்கள் கூறும் நேரத்தில் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.
- அலுவலர்களிடம் செல்லும் போது என்ன தகவல்கள் வேண்டும் என்ற நோக்கில் கேள்விகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.
- அனைவரும் மனித உரிமை மாணவர்கள் என்ற இலக்கணத்திற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.
- முதலில் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். தாங்கள் யார் என்பதையும் என்ன நோக்கத்திற்கான இங்கு வந்துள்ளோம் என்பதையும் தெளிவாகக் கூற வேண்டும்.
- அலுவலர்கள் கூறுவதைத் தெளிவாக குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அலுவலகத்தில் புத்தகங்கள் மற்றும் கோப்புகள் இருந்தாலும் அவைகளைக் கேட்டு பெறலாம்.
- அதிகபட்சம் 1 மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

## படிநிலை-03-பணிகள் நடைபெறும் பகுதிகளை நேரடியாக பார்வையிடல்

- மக்கள் நலத்திட்டங்கள் நடைபெறும் பகுதியை பார்வையிட முன்கூட்டியே அனுமதி பெற்றால் நல்லது. ஏனெனில் அன்றைய தினம் பணி இருக்குமா? எங்கு நடைபெறும் போன்ற தகவல்களைப் பெறலாம்.
- பணிகள் நடைபெறும் போது அனைவரும் சேர்ந்து செல்லலாம். பணி செய்யம் இடத்தில் பாதுகாப்பாக, முன்னேச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்.
- நீங்கள் செல்லும் இடத்தில் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதனால் நேர மேலாண்மை மிக அவசியம்.
- உதாரணத்திற்கு
  - o தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டப் பணிகள் நடைபெறும் இடங்கள்
  - o மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஊரகம் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் இடங்கள்
  - o பொது விநியோகத் திட்டம்-கூட்டுறவு நியாய விலைக் கடைகள்

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- அரசின் மக்கள் நல திட்டங்களைத் தெரிந்து கொள்வார்கள்.

- மக்கள் நல திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் சாதக, பாதக அம்சங்களை அறிந்து கொள்வார்கள்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

உள்ளூர் இளைஞர்கள், மூத்த மாணவர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மனித உரிமைக் கல்வி மாணவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள்.

## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

### இந்திய அரசியலமைப்புச் சட்டம்

**பிரிவு-14**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். அல்லது சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள் அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது.

**பிரிவு-15**

மதம், இனம், சாதி, பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு பாகுபாடு காட்டக் கூடாது.

**பிரிவு-15 (3)**

குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக் கூடாது.

**பிரிவு-15 (4)**

கல்வி பெற வாய்ப்பற்ற பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரை முன்னேற்ற வழங்கப்படும் முன்னுரிமை மற்றும் சலுகைகளை இப்பிரிவு தடை செய்யக் கூடாது.

**பிரிவு-15 (2)**

அரசு பதிவுகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பில் அனைத்து குடிமக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**பிரிவு-17**

தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதால், எந்த வடிவிலும் தீண்டாமையைப் கடைபிடிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டப்படி குற்றமாகும்.

**பிரிவு-24**

14 வயதிற்குபட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும் சுரங்கத்திலும் பிற அபாயகரமான தொழிலிலும் ஈடுபடுத்தக்கூடாது.

### பிரிவு-22

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில், சமூகப் பாதுகாப்பிற்கான உரிமையும், குடிமக்களின் மாண்பிற்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் தேவையான பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.தேசிய அரசின் வளர்ச்சி திட்டங்கள், அகில உலக ஒத்துழைப்பு, குறிப்பிட்ட அரசமைப்பு, நாட்டு வளங்கள் என்பனவற்றின் அடிப்படையில் அமையும்.

### பிரிவு-23(1)

வேலைக்கான உரிமையும், தான் விரும்பும் வேலையைத் தேர்வு செய்து கொள்ளும் உரிமையும் நியாயமான, சாதகமான பணிச்சூழலுக்கான உரிமையும், வேலையின்மைக்கு எதிராகப் பாதுகாப்பு பெறும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

## பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை-1979

### பிரிவு-03

பெண்களின் முழுவளர்ச்சியை கவனத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கை எடுப்பதோடு தேவையான சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

### பிரிவு-11

விரும்பிய வேலையை தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்கு உண்டு. சம ஊதியம், சலுகைகள் பெறவும், சமமாக நடத்தப்பெறவும், சமூகப் பாதுகாப்பு பெறவும் உரிமையுண்டு. சம்பளத்தோடு கூடிய மகப்பேறு கால விடுப்பு எடுக்கவும் உரிமை உண்டு.

### பிரிவு-14

இவ்வுடன்படிக்கைகளில் தரப்பெறும் அனைத்து உரிமைகளும் கிராமப்புற பெண்களுக்கும் கிடைக்க வகை செய்ய வேண்டும். அரசின் திட்டங்களிலும் நடைமுறைப்படுத்தலிலும் பங்குபெற நடைமுறைப்படுத்த உரிமை உண்டு. சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் பங்குபெற சுயஉதவிக் குழுக்களை உருவாக்க சமூக நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும் உரிமை உண்டு.



# 06.தெரிந்து கொள்வோம் நமக்கான சட்டங்களை



## அறிமுகம்-Introduction

நம் நாடு 1950 ஆம் ஆண்டு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. நமக்கான அரசியல் சாசனம் வகுக்கப் பெற்று அதனடிப்படையில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்று வருகிறது. நம் நாட்டின் தாய் சட்டம் என்றால் அது இந்திய அரசியல் சாசனமே ஆகும். மக்களின் உரிமைகள் மையப்படுத்தி நாட்டில் பல வகையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவை நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டால் மைய சட்டம் என்றும் மாநில சட்டமன்றங்களில் இயற்றப்பட்டால் அவை மாநில சட்டங்கள் என்றும் அழைக்கப்படும். இவைகள் அல்லாமல் மூன்றாவதாக உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் சட்டத்திற்கு ஒப்பானதாகும்.

உலகத்திலேயே அதிகளவு சட்டம் இயற்றிய நாடு இந்தியாவாகும். ஏறக்குறைய 42 ஆயிரத்திற்கும் அதிகமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மக்கள் அதை முழுமையாக பயன்படுத்தும் போதுதான் அதன் பயன் முழுமையாகும். இல்லையெனில் அவை வெறும் ஏட்டளவில்தான் இருக்கும்.

சட்டம் என்பது ஏதோ புரியாத ஒரு செய்தி அல்ல. சட்டங்களை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் நாம் சட்டத்தின் குடிமக்கள். நாம் குழந்தைகளுக்கும் அவர்களுக்கே உரிய பக்குவத்தில் சொல்லிக் கொடுப்பது அவசியமாகும். இந்த அத்தியாயத்தில் சில முக்கியமான சட்டங்களை நாம் தெரிந்து கொண்டு பள்ளியிலும் கிராமத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். எதிர்காலத்தில் சட்டத்தை முழுமையாகப் புரிந்து சட்டத்தின்படி நடக்கும் நல்குடிமக்களை உருவாக்குவோம்.

## திட்டமிடுதல்-Planning

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் தலைமையாசிரியருடன் கலந்தாலோசனை செய்து சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்தும் வகையில் ஒரு நாள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யலாம்.
- கருத்தாளராக உள்ளூரில் உள்ள வழக்கறிஞர் அல்லது மனித உரிமை செயல்பாட்டாளரை அழைக்கலாம். அவர்களிடம் தேதியை கூறி அழையுங்கள் அல்லது அவர்களுடைய கருத்தில் கொண்டு பயிற்சியை நடத்தலாம்.

- சட்டத்தை பற்றி முழுமையாக விளக்கம் அளிக்க தேவையில்லை. அதன் அடிப்படை நோக்கத்தையும் முக்கிய சாரம்சத்தையும் அளித்தால் போதுமானது.
- மக்களிடம் எவ்வாறெல்லாம் சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தலாம் என்ற கோணத்தில் திட்டமிடலாம். அதே நேரத்தில் இவர்கள் குழந்தைகள் அவர்களுக்கே உரிய வயது பக்குவத்தில் மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் இருப்பது அவசியம்.
- கிராமத்தில் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தலாம். மேல்நிலைப் பள்ளி என்றால் தேசிய நாட்டு நலப் பணி திட்டத்தில் உள்ள மாணவர்களையும் அழைக்கலாம்.

## சில சட்டங்களும் விளக்கங்களும்

இங்கு சில சட்டங்களின் முக்கிய சாரம்சங்களை மட்டுமே கொடுத்துள்ளோம். இது முழுமையான விளக்கம் அல்ல என்பதை மனதில் இருத்திக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம். சந்தேகங்கள் ஏற்படும் பட்சத்தில் மூல சட்டத்தை பார்க்கவும்.

### 1.தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005

- வெளிப்படை தன்மையை உறுதி செய்ய
- அரசு மக்களுக்கு பதிலளிக்க கடமைப்பட்டுள்ளது என்பதை உணர்த்த
- குடிமக்கள் அனைவருக்கும் தகவல் பெறும் உரிமையை அளித்தல்.

### தகவல் என்றால் என்ன?

பதிவேடுகள், ஆவணங்கள்/குறிப்புகள், சுற்றறிக்கைகள்/ஆணைகள், உத்தரவுகள்/ஒப்பந்தங்கள்/ அறிக்கைகள்/மின்னஞ்சல், கருத்துகள் ஆலோசனைகள், பத்திரிகைச் செய்திகள், இயந்திர பதிவேடுகள், பொருள் மாதிரிகள்

### தகவல் அறியும் உரிமை என்பது என்ன?

1. பணிகளை மேற்பார்வையிடுவது
2. ஆவணங்கள், பதிவேடுகளைப் பார்வையிடுவது
3. குறிப்பெடுப்பது
4. பொது அதிகார அமைப்பிடமிருந்து குறிப்புகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்கள், மாதிரிகள் பெறுவது.
5. அச்சிட்ட நகல்களைப் பெறுவது,
6. கணினிக் குறுந்தகடு, மென் தகடுகள், ஒலி ஒளி நாடாக்கள், ஒளிப்படப் பேழைகள், வேறு எந்த மின்னணுவியல் முறையிலும் இருக்கும் தகவல்கள் பெறுவதும் அடங்கும்.

### கால அவகாசம்

1. வாழ்வுரிமை அல்லது தனி மனித சுதந்திரம் – 48 மணி நேரம்
2. மற்ற தகவல் – 30 நாட்கள்
3. 3-ஆம் நபர் குறித்த தகவல்களைத் தெரிவிக்க – 40 நாட்கள்
4. உரிய அதிகாரிக்கு மனு செய்யப்படாவிட்டால், மனுவை பெற்ற அதிகாரி உரிய அதிகாரிக்கு மனுவை அனுப்ப – 5 நாட்கள் (அனுப்பப்பட்ட விபரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.)

**கட்டணம்**

1. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு கட்டணமில்லை.
2. மற்றவர்களுக்கு விண்ணப்ப கட்டணம் ரூ. 10/-
3. குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு வழங்கப்படுகின்ற மேற்படி தகவல்களுக்குக் கட்டணமில்லை.
4. விண்ணப்பத்திற்கான ரசீது வழங்கப்படும்.

**விதிவிலக்குகள்**

1. நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு போன்ற 10 வகை தகவல்கள் தருவதிலிருந்து நிறுவனங்களுக்கு, அதிகார அமைப்புகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
2. ஒரு நீதிமன்றத்தால் வெளியிடப்படக்கூடாது என தடை செய்யப்பட்ட தகவல்கள் நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்ட மன்றங்களின் உரிமை மீறல் குற்றத்திற்கு உள்ளாக்கக் கூடிய தகவல்கள்.

**தண்டனைகள் உண்டா?**

தகவல் தர மறுத்த அதிகாரிக்கு அல்லது காலதாமதம் செய்யும் அதிகாரி மீது 4 வகையான நடவடிக்கை எடுக்கலாம்.

1. அபராதம்=நாள் ஒன்றுக்கு ரூ. 250/- வீதம், ரூ.25,000/- வரை.
2. இலாகாபூர்வ நடவடிக்கை
3. ஆணை பிறப்பிக்கலாம்
4. நஷ்ட ஈடு

## 2.குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம்-2005

**குடும்ப வன்முறை என்றால் என்ன?**

- ஒருவருக்கு காயம் அல்லது உடல்வலியை ஏற்படுத்தி, அதன் மூலம் அவரது உடல் உறுப்புகளுக்கோ, உயிருக்கோ, முன்னேற்றத்திற்கோ ஊறு விளைவிக்கும் அனைத்து வகையான உடல் / உளவியல்/ பாலியல் / பொருளாதார வன்முறையும், குடும்ப வன்முறையே
- ஒரே குடும்பத்தில் / வீட்டில் /ஏதேனும் வகை உறவில் பாதிப்பை ஏற்படுத்திய ஒரு ஆணுடன் வசிக்கும் /பாதிப்புக்குள்ளான பெண்கள் அனைவருமே....
- ஒரு குடும்பத்தில் பாதிக்கப்பட்ட நபருடன் இணைந்து வாழும் பாதிப்பை ஏற்படுத்திய ஆண் மற்றும் அவர் உறவினர்...
- பாதிப்புக்குள்ளானோர் சார்பாக எந்தவொரு நபரும் தலையீடு செய்து புகார் அளிக்கலாம்
- பாதிக்கப்பட்ட நபர் புகார் அளிக்கப்பட்ட பிறகு தொடர்ந்து அந்த வீட்டில் தங்கியிருக்க உரிமை உள்ளது.
- அவ்வாறு பாதிக்கப்பட்ட நபர் அதே வீட்டில் வசிக்கும் பட்சத்தில்
- எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்திய நபர் எவ்விதமான முறையிலும் ஊறு விளைவிக்கவோ துன்புறுத்தவோ கூடாது
- எல்லா செலவுகளையும் பாதிப்பை ஏற்படுத்தியவர்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- குடும்ப வன்முறை சம்பந்தமான வழக்குகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும்.
- புகார் பெற்று மூன்று நாட்களுக்குள் முதல் அமர்வும் அறுபது நாட்களுக்குள் அவ்வழக்கும் முடிக்கப்பட வேண்டும்.
- தண்டனை-ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது அபராதத் தொகையாக ரூபாய் இருபதாயிரம்
- பாதிக்கப்பட்ட நபரின் இழப்புகளுக்கும் உளவியல் துன்புறுத்தலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தியவர் பொறுப்பு ஏற்க வேண்டும்.
- குடும்ப வன்முறை பிணையில் வெளிவர முடியாத குற்றம்.

## 3.குழந்தைகளின் இலவச, கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம்-2009

- இச்சட்டம் 6 முதல் 14 வயது வரை உள்ள ஆண் அல்லது பெண் குழந்தைகளுக்கு பொருந்தும்
- முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பொருந்தும்.தொடக்கக் கல்வியை வழங்குகிற எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியையும் இது குறிக்கும்
- 6 வயதுக்கு மேற்பட்ட ஒரு குழந்தை எந்தவொரு பள்ளியிலும் சேர்க்கப்படவில்லை என்றால் அல்லது சேர்க்கப்பட்டிருந்தாலும் தனது தொடக்கக் கல்வியை முடிக்க இயலவில்லையென்றால் அதன் வயதுக்குப் பொருத்தமான ஒரு வகுப்பில் சேர்க்கப்படும்.
- தொடக்கக் கல்வியை முடிப்பதற்கு வழியில்லாத, ஒரு பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக வேறு பள்ளிக்கு மாற்றக் கோரும் உரிமை உண்டு.
- ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்குவது அரசின் கடமை
- ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது ஓர் அருகாமைப் பள்ளி அமையும்படி அரசு உறுதிப்படுத்த வேண்டும்.
- நலிந்த பிரிவையும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவையும் சேர்ந்த குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும், அவர்கள் எந்த காரணத்திற்காகவும் தங்கள் தொடக்கக் கல்வியை படித்து முடிப்பதிலிருந்து தடுக்கப்படாமல் இருப்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.
- அரசு, பள்ளிக் கட்டடம், ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சாதனங்கள் உள்ளிட்ட உள் கட்டுமானங்களை வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்.
- நல்ல, தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- தொடக்கக் கல்விக்கான பாடத்திட்டம் உரிய காலத்தில் வகுக்கப்படுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

- **உள்ளாட்சிகள்** தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில், வகுத்துரைக்கப்படும் வழிமுறைப்படி, அப்பகுதியில் வசிக்கும் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பற்றிய ஆவணங்களைப் பராமரிக்க வேண்டும்.
- இடம் பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பள்ளிகளின் செயல்பாட்டை கண்காணிக்க வேண்டும்.
- தங்கள் குழந்தை அருகாமை பள்ளி ஒன்றில் தொடக்கக் கல்வி பெறுவதற்காக **பள்ளியில் சேர்ப்பது அல்லது சேர்க்க வைப்பது** என்பது ஒவ்வொரு பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கடமையாகும்.
- அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகள் அனைத்தும் இலவச, கட்டாயக் கல்வி வழங்க வேண்டும்.
- தனியார்ப் பள்ளிகள் முதல் வகுப்பில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகாமை பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த குழந்தைகளாக சேர்த்து அவர்களுக்கு தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச, கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கவேண்டும்.
- ஒரு குழந்தைக்கு இவ்வளவு என அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் கட்டணம் பெறக்கூடாது.
- விதிகளை மீறி எந்தவொரு பள்ளியாவது அல்லது எந்தவொரு நபராவது கல்விக் கட்டணம் வசூலித்தால் வசூலிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தைப்போல் **10 மடங்கு வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.**
- பள்ளியில் சேர்க்க தேர்வு நடத்தக் கூடாது.
- வயது சான்றிதழ் இல்லாத காரணத்திற்காக எந்தவொரு குழந்தைக்கும் பள்ளிச் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது
- **எந்தவொரு வகுப்பிலும் தொடர்ந்து இருக்க வைக்கப்படக்கூடாது, பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவும் கூடாது.**
- எந்தவொரு குழந்தையும் **உடல் ரீதியான தண்டனைக்கோ மன ரீதியான துன்புறுத்தலுக்கோ உள்ளாக்கப்படக்கூடாது. பள்ளியின் பொறுப்பு**
- பள்ளிகளை **அங்கீகாரச் சான்றிதழ் பெறாமல் நிறுவப்படவோ, செயல்படவோ கூடாது.**

**பள்ளி நிர்வாகக் குழு**

- உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்,
- பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.
- குழுவின் உறுப்பினர்களில் **முக்கால் பங்கினர் பெற்றோர்கள் அல்லது பாதுகாப்பாளர்களாகவே** இருக்க வேண்டும்

- வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகங்களையும் நலிந்த பிரிவுகளையும் சேர்ந்த பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களுக்கு அக்குழுவில் விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம்அளிக்கப்பட வேண்டும்.
- குழுவின் உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டினர் பெண்களாக இருக்க வேண்டும்
- பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
- பள்ளி மேம்பாட்டுத்திட்டம் தயாரித்தல், பரிந்துரைத்தல்,
- உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் அல்லது வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும்
- ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் வகுத்துரைக்கப்படும் வகையில் பள்ளிமேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.
- இவ்வாறு தயாரிக்கப்படும் பள்ளி மேம்பாட்டுத்திட்டமே சம்பந்தப்பட்ட உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையாக இருக்கும்

## ஆசிரியர்களின் கடமைகள்

- **பள்ளிக்குத் தொடர்ச்சியாகவும் உரிய நேரப்படியும் வருதல்.**
- வரையறுக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப, பாடத்திட்டத்தை நடத்தி முடித்தல்;
- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் திறனையும் மதிப்பிடுதல், தேவைப்படுமானால் கூடுதல் பயிற்சி வழங்கி ஈடு செய்தல்;
- பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்களுடன் சந்திப்புக் கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி, குழந்தையின் தொடர்சியான வருகை, கற்றல் திறன், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இதர பொருத்தமான தகவல்களைத் தெரிவித்தல்
- மாணவர் –ஆசிரியர் விகிதத்தை பராமரிக்க ஒரு பள்ளியில் நியமிக்கப்படும் எந்தவொரு ஆசிரியரும் **வேறு பள்ளியிலோ அல்லது அலுவலகத்திலோ பணியாற்றும்படி செய்யக்கூடாது, அல்லது கல்வி சாராத வேறு பணிகளுக்கு அனுப்பப்படக்கூடாது**.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரிடர் நிவாரண பணிகள் அல்லது தேர்தல்கள் தொடர்பான பணிகளுக்கு செல்லலாம். பிற பணிகளுக்கு அனுப்பக் கூடாது.
- எந்தவொரு ஆசிரியரும் தனிப் பயிற்சி (டியூசன்) அல்லது தனிப்பட்ட பயிற்றுவிப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.
- இந்த சட்டத்தால் அல்லது இந்த சட்டத்தின் கீழ் உரிமைகளை பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பரிசீலித்தல், மறு ஆய்வு செய்தல், அவற்றை பயன் விளைவிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.
- குழந்தையின் இலவச கட்டாயக் கல்வி தொடர்பான புகார்கள் குறித்து விசாரித்தல்

## 4.குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம்-1986

- இச்சட்டத்தின்படி 14 வயது பூர்த்தி அடையாத அனைவரும் குழந்தைகள் எனப்படுவர்.

- பயணிகள், சரக்கு போக்குவரத்து, தொடர்வண்டி, அஞ்சல், கனரக, அபாயகரமான தொழில்கள், பீடி சுற்றுதல், நெசவு, தீக்குச்சி, பட்டாசு போன்ற தொழில்களில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தவே கூடாது.
- வேலையில் 3 மணி நேரத்திற்கு ஒரு முறை ஓய்வு கொடுக்க வேண்டும்.
- வாரத்தில் ஒரு நாள் முழு விடுமுறை அளிக்க வேண்டும்.
- மாலை 7க்கு மேல் காலை 8 மணிக்கிடையே வேலை செய்ய கூடாது.
- வேலை செய்யும் குழந்தைகளின் ஆவணங்கள் முறையாக பராமரிக்க வேண்டும்.
- பணி செய்யும் இடம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். நிறுவனம் சட்டப்படியான தரவுகளை முறையாக கடைபிடிக்க வேண்டும்.
- இச்சட்டம் பணி செய்ய தடை விதித்த தொழில்களில் குழந்தைகளை பணிக்கு அமர்த்தினால் ஒரு வருட சிறை தண்டணை மற்றும் 20 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

## 5.கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம்-1976

- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டு விட்டது. அவ்வாறான பணியில் இருந்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டவராகிறார்.
- சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து யாரும் கொத்தடிமை முறைக்கான முன்பணம் அளிக்கக் கூடாது.
- கொத்தடிமை முறைக்கு யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது.
- கொத்தடிமை முறைக்காக கடன் தொகை ஏதேனும் நிலுவையில் இருந்தால் அவை முடிவுற்றதாக கருதி கட்டாயப் படுத்தக் கூடாது.
- கொத்தடிமைக் கடன் தொகையை திரும்பப் பெறுவதற்கு இச்சட்டம் வருவதற்கு முன்பு சொத்தை கையகப்படுத்தும் வகையில் ஒப்பந்தம் ஏதாவது இருந்தால் அவை காலவதியானதாகவே கருத வேண்டும். கடனுக்கான சொத்தை வலுகட்டாயமாக எடுத்துக் கொள்ளவும் கூடாது.
- கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டதால் அவர் வாழும் இடத்தை அப்புறப்படுத்த சொல்லி கட்டாயப்படுத்தக் கூடாது.
- கொத்தடிமை முறையில் வேலை செய்ய யாரையும் கட்டாயப்படுத்தினால் மூன்றாண்டு சிறைத் தண்டனை.
- கொத்தடிமை முறைக்கு கடன் அளித்தால்-3 ஆண்டு சிறை தண்டனை.
- கொத்தடிமை முறையிலிந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அரசே மறுவாழ்வு திட்டங்களை நடைமுறைப்படுத்தும்.

## 6.வரதட்சணை தடுப்புச் சட்டம்-1961

- மணமக்கள் இருவரில் ஒருவரின் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் மணமக்களின் பெற்றோர் அல்லது உறவினர்களிடம் மணநாளன்றோ அல்லது மணநாளுக்கு முன்போ அல்லது பின்போ அல்லது திருமணத்திற்கு பிறகு எந்த சமயத்திலும் கொடுத்த அல்லது

கொடுக்க ஒப்புக் கொண்ட எந்த பொருளும் அல்லது கிரைய மதிப்புள்ள உறுதிப்பத்திரமும் வரதட்சணையாக கருதப்படும்.

- வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் குற்றம்
- வரதட்சணை வாங்கவோ, கொடுக்கவோ உதவி செய்வது குற்றம்.
- வரதட்சணை கேட்பதும் குற்றம்.
- ஒருவர் தனக்கோ, தனது மகனுக்கோ, அல்லது உறவினரின் திருமணத்திலோ வரதட்சணை பெறுவது குற்றமாகும்.
- வரதட்சணை கொடுப்பவரும் குற்றவாளிதான்.
- வரதட்சணை கொடுப்பதும், பெறுவதும்-ஐந்து வருட சிறை மற்றும் 15,000.00 அபராதம்.
- எவர் ஒருவரும் திருமணத்திற்கு கைமாறாக சொத்தில் ஒரு பங்கு அல்லது பணம் அல்லது தொழிலில் ஒரு பங்கு என வாக்குறுதி அல்லது விளம்பரம் செய்தால் குற்றம். அதற்கு 6 மாதம் முதல் 5 ஆண்டு சிறை தண்டனை மற்றும் அபராதம்.
- வரதட்சணை தொடர்பான எந்த ஒப்பந்தமும் சட்டப்படி செல்லாது.
- வரதட்சணை புகாரை சம்பவம் நடந்த ஒரு வருடத்திற்குள் செய்ய வேண்டும்.
- வரதட்சணை சாவு-ஒரு பெண் துன்புறுத்தப்பட்டு திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் இயற்கைக்கு மாறான காரணங்களால் இறக்க நேர்ந்தால் அவளின் கணவனும் உறவினர்களும் குற்றவாளியாக கருதப்படுவர்-வரதட்சணை கொடுமையால் இறந்தார் என்று நிறுபிக்கப்பட்டால் 7 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை கொடுக்கப்படும்.
- வரதட்சணைக்காக ஒரு பெண்ணை கொடுமைப்படுத்துவதும் குற்றம். அதற்கும் தண்டனைகள் உண்டு.

## 7.குழந்தைத் திருமண தடைச் சட்டம்-2006

- இச்சட்டத்தின்படி 21 வயது பூர்த்தி அடையாத ஆணும் 18 வயது பூர்த்தியடையாத பெண்ணும் குழந்தை என்று அழைக்கப்படுவர்.
- குழந்தை திருமணம் என்பது ஒப்பந்தத் தரப்பினர்கள் இருவரில் ஒருவர் குழந்தையாக இருந்து செய்யப்படும் திருமணம்.
- 18 வயது பூர்த்தியடைந்த ஆண் ஒருவர் 18 வயது பூர்த்தி அடையாத பெண்ணை திருமணம் செய்தால் அது குற்றம். இரண்டு வருட சிறை தண்டனை அல்லது 1 இலட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.
- குழந்தை திருமணத்தை நிறைவேற்றி வைக்கிற, நடத்துகிற அல்லது இயக்குகிற எவரொருவரும் அந்த திருமணம் குழந்தைத் திருமணம் அல்ல என்பதற்கான காரணங்களை நிரூபிக்க வேண்டும். நிருபிக்க தவறும் பட்சத்தில் இரண்டு வருட சிறை தண்டணை மற்றும் 1 இலட்சம் ரூபாய் அபராதம் மற்றும் இரண்டும்.
- குழந்தைத் திருமணம் நடக்கிறது என்பதை உறுதியாக அறிந்த ஒரு நபரோ, ஒரு தன்னார்வ அமைப்போ நேரடியாக குழந்தை திருமணம் தடுப்பு அதிகாரியிடம் புகார் அளிக்கலாம் அல்லது நீதிமன்றத்தில் தெரிவிக்கலாம்.

- நீதிமன்றமே தனக்கு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் தாமாகவே வழக்கை எடுத்துக் கொள்ளலாம்.
- அட்சய திரிதியை போன்ற விசேச நாட்களில் பெரும் திரளான திருமணங்கள் நடைபெறும் அவ்வாறு நடைபெறும் போது குழந்தைத் திருமணம் அறவே இருக்க கூடாது.

## 8.நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்-1986

- பொருட்கள் மற்றும் பல்வேறு சேவைகளை நாம் ஒவ்வொருவரும் பணம் கொடுத்து பெற்று நம் அன்றாட வாழ்வில் தினமும் பயன்படுத்தி வருகிறோம். இவ்வாறு எந்த ஒரு பொருளை மற்றும் சேவையைப் பணம் கொடுத்து பெறும் எவரும் நுகர்வோரே.
- நுகர்வோருக்கான உரிமைகள்- உயிருக்கும் உடமைக்கும் ஊறு விளைவிக்கின்ற பொருட்களின் விற்பனைக்கெதிராகப் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை.
- நியாயமற்ற வியாபார நடவடிக்கையிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் விற்பனைப் பொருட்களின் தரம், அளவு, வீரியம், சுத்தம், விலை ஆகியவைகளை தெரிவிக்க வேண்டிய உரிமை
- பலதரப்பட்ட பொருட்களின் தேவையானதை தெரிவு செய்யும் உரிமை.
- நியாயமற்ற வணிக நடவடிக்கைகளால் அல்லது தகாத முறையில் சுரண்டப்படுவதற்கெதிராகப் பரிகாரம் அல்லது நஷ்டஈடு பெறுவதற்கான உரிமை
- பாதிக்கப்பட்ட நுகர்வோர் அல்லது அவர் அதிகாரமளித்த வேறு எவரும் புகார் அளிக்கலாம்.
- நுகர்வோர் பாதுகாப்பு மன்றத்திடம் புகார் அளிக்கலாம்.
- புகாரை எங்கு கொடுக்கலாம்-இழப்பின் மதிப்பு ஐந்து இலட்சம் ரூபாய் வரை இருந்தால் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்பிலும், இழப்பு ஐந்து இலட்சத்திற்கு அதிகமாக இருந்தால் மாநில நுகர்வோர் ஆணையத்திடமும் அளிக்கலாம்.
- புகாரை நேரில் அல்லது பதிவு தபாலில் அனுப்பலாம். (4 நகல்கள் அனுப்ப வேண்டும்)

## 9.தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம்-1989

***<u>சட்டத்தின் அடிப்படை நோக்கம்</u>***

- கொடுமைகளைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல்.
- பாதிக்கப்பட்டோருக்கு புனர் வாழ்வு அளித்தல்.

***<u>சிறப்பு அம்சங்கள்</u>***

- சிறப்புச் சட்டம், சிறப்பு நீதிமன்றம், சிறப்பு வழக்கறிஞர்.
- 23 வகையான வன்கொடுமைக் குற்றங்கள்-தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினர் அல்லாத ஒருவர் மேற்கண்ட இரு பிரிவினருக்கு எதிரான கீழ்க்கண்ட குற்றங்களை செய்தால் அவை வன்கொடுமை எனப்படும்.

o உண்ணத்தகாத அல்லது அருவருப்பான எதனையும் குடிக்குமாறு வற்புறுத்துவது.

o அவரது இருப்பிடத்தில் அல்லது அருகில் மலம், கழிவு பொருள், விலங்கின் பிணச்சிதைவுகள் மற்றும் அருவருப்பான பொருட்களை கொட்டினால்

- உடம்பிலிருந்து உடைகளை அகற்றுவது, சாயத்தை ஊற்றுவது, ஆடைகளை களைந்து ஊர்வலமாக இழுத்து செல்வது,
- நிலத்தை சட்ட விரோதமாக கைப்பற்றுதல், இடையூறு செய்தல்
- பலவந்தமாக வேலை வாங்குவது, கொத்தடிமை வேலை, ஆசை காட்டி வேலை வாங்குதல்
- விரும்பியவருக்கு வாக்களிக்க தடை செய்வது அல்லது ஒருவருக்கு வாக்களிக்க கட்டாயப்படுத்துவது அல்லது மிரட்டுவது.
- பொய்யான புகாரை அளித்தல் அதன் மூலம் தண்டனை பெறுதல் போன்ற குற்றம்.
- அரசு அதிகாரிகளிடம் பொய்யான புகாரை அளித்து அதன் மூலம் அதிகாரி தன் அதிகாரத்தை பயன்படுத்தி தொல்லை கொடுப்பது.
- பொது இடத்தில் சாதி பெயரைச் சொல்லி அவமானப்படுத்துவது.
- பணியிடத்தில் தாழ்த்தப்பட்ட பெண்ணை தன் அதிகாரத்தை பயன்படுத்தி தவறாக பயன்படுத்தவது
- நீர் ஆதாரங்களை பயன்படுத்த முடியாமல் மாசுப்படுத்துவது.
- பொது இடம் அல்லது பொதுப் பாதையில் செல்ல தடை விதிப்பது
- தாழ்த்தப்பட்டவர் வீடு அருகில் இருந்தால் அவரை கட்டாயப்படுத்தி காலி செய்ய வற்புறுத்துவது அல்லது முயற்சி செய்வது.
- மரண தண்டனை சிறைத் தண்டனை பெறும் குற்றத்தை சுமத்தி பொய்ச்சான்று அளிப்பது அல்லது புனைந்தால்
- சொத்துக்களை தீயிடுதல் அல்லது அழித்தல்
- வழிபாட்டு இடங்கள் அல்லது பொது இடம் என்று சொல்லக் கூடிய இடத்தை தீயிடுவது அல்லது அழிப்பது
- அரசு ஊழியராக இருந்து குற்றத்தை செய்தால் ஒரு வருட சிறை தண்டனை
- இந்த சட்டத்தின் படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஒரு அரசு ஊழியர் எடுக்க தவறுவார் என்றால் குற்றம்.
- கடமைகளைப் புறக்கணிக்கும் அதிகாரிகளுக்குத் தண்டனை.

## வன்கொடுமை நடந்தால் அரசு அதிகாரிகள் செய்ய வேண்டியது

- வன்கொடுமை நடந்த இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர் பார்வையிட்டு சேத விபரப் பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- உடனடியாக புலனாய்வு அதிகாரி மற்றும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
- பாதிக்கப்பட்டோர்களுக்கு மருத்துவச் செலவு, சிறப்பு மருத்துவ ஆலோசனை, இரத்தம் செலுத்துதல், உணவு மற்றும் பழங்கள், உடைகள் ஆகியவற்றிற்கான செலவுகளைத் திருப்பி செலுத்துதல் வேண்டும்.

- மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துதல்.
- எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்தல்.

## புகாரைப் பதிவு செய்ய மறுத்தால்-பாதிக்கப்பட்டவர் செய்ய வேண்டியது

- புகாரை எழுதி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு பதிவு அஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டும்.
- அஞ்சல் மூலமாக பெறப்பட்ட புகாரைப் பதிவு செய்ய அவர் உரிய நடவடிக்கை எடுப்பார்.
- நம் நாட்டில் பெரும்பாலான தொழிலாளர்கள் குறிப்பிட்ட துறையில் முறையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக உள்ளனர். போதிய அளவில் வேலைவாய்ப்பு கிடைக்காததால் கிடைக்கும் வேலையை செய்கின்றனர். அதனால் குறைந்த கூலிக்கு வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகின்றனர். இத்தகைய தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டலைத் தடுத்து, அவர்களின் உழைப்புத் திறனை காக்கும் நோக்கில் இயற்றப்பட்ட சட்டம்தான் குறைந்தபட்ச கூலிச் சட்டம்.
- குறைந்தபட்ச கூலி என்பது ஒரு தொழிலாளிக்கும், அவனது குடும்பத்திற்கும் தேவையான உணவு, உடை, வீடு, மருத்துவம், கல்வி போன்ற நியாயமான தேவைகளுக்கான பொருளாதாரத்தை ஈடு செய்ய வழங்க வேண்டிய கூலியின் அளவே குறைந்தபட்ச கூலி.
- குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளதெனில் அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலிதான் தரப்பட வேண்டும். அதற்குக் குறைந்து எங்கும் யாராலும் வழங்கப்பட கூடாது.
- குறைந்தபட்ச கூலியை அரசாங்கம் நிர்ணயம் செய்யும்.
- ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான கூலியே நிர்ணயிக்கப்பட்டு வழங்க வேண்டும்.
- எட்டு மணி நேரத்திற்கும் மேற்பட்ட வேலைக்கு இரட்டைக் கூலி தரப்பட வேண்டும்.
- தொடர்ந்து 7 நாட்களும் வேலை செய்தால் 7வது நாள் வேலைக்கு இரட்டை ஊதியம் தரப்பட வேண்டும்.
- குறைந்தபட்ச கூலி சட்ட விதிமுறைகள் மீறப்பட்டால் பாதிக்கப்பட்ட தொழிலாளியோ அல்லது தொழிலாளியின் வழக்கறிஞர் அல்லது தொழிற்சங்கம் வழக்கு பதிவு செய்யலாம்.
- ஆலைத் தொழிலாளர்கள், நகர்புற தொழிலாளர்கள், கடைகள், விடுதிகள், போன்றவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் நீதிமன்றத்திலும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமும் புகார் அளித்து நீதி பெறலாம்.
- ஒரே தன்மையுடைய வேலைக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமஊதியத்தை வழங்க வழிவகை செய்கிறது.
- ஒரே தன்மையுடைய வேலைக்கு ஆள் சேர்க்கும் போது ஆண், பெண் என்று பாரபட்சம் காட்டக் கூடாது.
- ஒரே தன்மையுடைய வேலை என்பது தேவைப்படும் தொழில் நுட்பம், திறமை, பொறுப்பு ஆகியவை சமமானது என்பதை குறிக்கும்.

- ஒரே தன்மையுடைய வேலைக்கு தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தும் போது பெண்கள் இந்த வேலையை செய்ய முடியாது அல்லது செய்யக்கூடாது என்று பாகுபடுத்தக் கூடாது.
- மேற்கண்ட சட்டவிதிமுறைகள் மீறப்பட்டால் ரூ.5000.00 வரை அபராதம் விதிக்கப்படும்.
- சட்ட விதிமுறைகள் மீறப்பட்டால் தொழிலாளர் நல அலுவலர்களிடம் புகார் செய்து நீதி பெறலாம்.

## இளம்சிறார் நீதிச் சட்டம்

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

கருத்தாளர், பயிற்சிக்கான அறை, கருத்தாளருக்கான தேநீர் மற்றும் உணவு, ஆய்வு செய்வதற்கான எழுது பொருட்கள் மற்றும் படிவங்கள்.

## யார் ஏற்பாடு செய்வது? எப்பொழுது?

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் தலைமையாசிரியருடன் இணைந்து இதை திட்டமிட்டு மாணவர்களை மையப்படுத்தி கொண்டு செல்லலாம்.
- மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தலாம். அவை
    - ஒரு நாள் சட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம்
    - மக்களிடம் சட்ட அறிவு எப்படி உள்ளது என்பதைப் பற்றி கருத்து கேட்கலாம்.
    - எத்தனை நபர்கள் எத்தனை சட்டங்கள் தெரியும் என்பதைப் பற்றி .

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**செயல்பாடு-01**

**படிநிலை-01-சட்ட விழிப்புணர்வு பற்றிய கருத்தறிதல்**

- பள்ளியில் உள்ள மொத்த மாணவர்களில் சுமார் 50 மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும்.
- அவர்களிடம் தங்களுக்கு தெரிந்தவர்களிடம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்கலாம்.
    - சட்டம் என்றால் என்ன நினைக்கிறீங்க?
    - என்னென்ன சட்டங்கள் தெரியும்?
    - அவை எந்த விசயத்தைப் பற்றியது என்பதையும் கேட்கலாம்.

**படிநிலை-02-மக்கள் கருத்துக்களை தொகுத்தல்**

- மாணவர்கள் மூலம் சேகரித்த தகவல்களை தொகுக்க வேண்டும். அதன் மூலம் எத்தனை நபர்களுக்கு எத்தனை சட்டங்கள் தெரிந்துள்ளது என்பதையும் அவை எதனுடன் தொடர்புடையது என்பது பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**படிநிலை-03-பள்ளியில் அனைவருக்கும் தெரிவித்தல்**

- தலைமையாசிரியரிடம் முன்கூட்டியே அனுமதிப் பெற்று காலை வழிபாட்டு நேரத்தில் தாங்கள் கண்டறிந்த முடிவுகளை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளலாம். தொடர்ந்து சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி சொல்லலாம்.
- பள்ளியின் தகவல் பலகையில் அனைவரின் பார்வைக்கு வைக்கலாம்.

## படிநிலை-03-கிராமத்தில் நாடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

- குறிப்பிட்ட ஒரு நாளை தெரிவுச் செய்து கிராமத்தின் மையப் பகுதிக்குச் சென்று பல்வேறு வகைகளில் சட்டத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். அவை.
- வீதி நாடகங்கள்
- கதைப் பாட்டு (வில்லுப் பாட்டு)
- பாடல்கள்
- உரையாடல்கள்

போன்ற முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு ஊட்டலாம்.

### எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- மாணவர்கள் சட்டத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வார்கள்
- மக்களிடம் சட்டம் பற்றிய விழிப்புணர்வு எந்த அளவில் உள்ளது என்பதை அறிந்து கொள்வார்கள்.
- சட்டத்தின் ஆட்சியே நம் நாட்டின் அடிப்படை என்பதை உணர்ந்து கொள்வார்கள்.
- மாணவர்களிடையே குழு உணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும்.

### தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

உள்ளாட்சி தலைவர்கள், உறுப்பினர்கள், உள்ளூர் இளைஞர்கள், முன்னாள் மாணவர்கள்.

### தெரிந்து கொள்ள...

### இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

**பிரிவு-14**

சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள், அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக் கூடாது.

**பிரிவு-15(1)**

மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றின் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு வேற்றுமை பாராட்டுதல் கூடாது.

**பிரிவு-19**

பேச்சு மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை, கூட்டம் கூட, சங்கமாக சேர உரிமை.

### அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948

**பிரிவு-07**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். எவ்விதப் பாகுபாடுமின்றி சட்டத்தின் முன் சமபாதுகாப்பைப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு.

**பிரிவு-19**

கருத்துரிமை, எண்ணங்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. தடையின்றி தகவல்களை பெறவும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இருக்கின்ற

சமூகத் தொடர்பு சாதனங்களைத் தேச எல்லையைக் கடந்து சர்வதேச அளவிலும் குள் கடந்து முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை உண்டு.

**பிரிவு-20**

அமைதியான முறையில் கூடவும் சங்கமாக சேர்வதற்கும் உரிமை உண்டு.

**பிரிவு-29**

ஒரு மனிதன் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்ற போதுதான், அவன் சுதந்திரமான ஆளுமை பெற்ற, முழு வளர்ச்சியடைந்த மனிதனாக மாற முடியும். நாட்டில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டு பிறரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் அங்கீகரித்தும், மதித்தும், நாட்டின் அறநெறி கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும் பொது அமைதி, மக்களாட்சி சமூகத்தின் பொது நலன் போன்ற வரம்புகளுக்கு உட்பட்டு உரிமைகளையும், சுதந்திரங்களையும் பயன்படுத்த வேண்டும்.


## சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

**பிரிவு-07**

எவ்வித பாகுபாடுமின்றி சம வேலைக்கு சம ஊதியம், நியாயமான ஊதியம், கண்ணியமான தனது குடும்பத்தினை நடத்திட போதுமான ஊதியம், பாதுகாப்பான சுகாதாரமான பணிச்சூழல், பணி உயர்வு, ஓய்வு, இளைப்பாறுதல், நியாயமான வேலை நேரம், ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நியாயமான மற்றும் சாதகமான பணிச் சூழலுக்கான உரிமை.

**பிரிவு-08**

ஒருவரின் பொருளாதார மற்றும் சமூக நலன்களை வளர்ப்பதற்காகவும், பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் அவர் விரும்பும் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக சேர்வதற்கும் உரிமை உண்டு.



# 07. சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நமது கடமையும்



## அறிமுகம்-Introduction

நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் தொகுப்பே சுற்றுச்சூழல் எனப்படும். உயிருள்ளவைகள் என்பது ஒரு செல் உயிரியிலிருந்து தாவரங்கள், விலங்குகள் வரை உள்ளடக்கம். உயிரற்ற பொருட்கள் என்பது நீர், காற்று, ஒலி, ஒளி, நிலம் ஆகியவைகளை குறிக்கும்.

சுற்றுச்சூழலுக்கும் இயற்கைக்கும் மனிதர்கள் செய்த மாபெரும் பிழைகளால் இன்று பருவநிலை மாற்றம் என்ற விளைவை சந்திக்க வேண்டியுள்ளது. ஆசிய நாடுகளில் இயற்கை பேரழிவு ஆபத்துகள் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்று யூனிசெப் அமைப்பு கூறுகிறது. இதில் 60 சதவீதம் பூகம்ப பாதிப்பு பகுதிகளாக உள்ளது. ஒரு கோடியே 40 இலட்சம் ஹெக்டேர் நிலப் பகுதி, வெள்ளப்பாதிப்பு ஏற்படும் பகுதியாக உள்ளது. 8000 கிலோ மீட்டர் கடற்கரை பரப்பு கடும் சூறைக்காற்றுக்கு இலக்காகும் பகுதியாக உள்ளது. இயற்கை பேரழிவால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதம் நஷ்டம் ஏற்படும். இந்தியாவில் 29 மாநிலங்கள் பல வகை இயற்கை பேரழிவு ஏற்படும் மாநிலங்களாக உள்ளன. இயற்கை பேரழிவு காலங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக அதிகமான நிதியை அரசு செலவு செய்யும் நிலைக்கு தள்ளப்படும். மேலும் அரசு இயந்திரம் முடங்கி முழுக் கவனமும் நிவாரணப் பணியில் ஈடுபடுவதால் மற்ற வளர்ச்சி பணிகள் முடங்கும் நிலை ஏற்படும். அதற்கு உதாரணம் சுனாமி மற்றும் தானே புயல்.

ஒவ்வொரு ஆண்டும் 32 பில்லியன் டன் கார்பன்-டை-ஆக்சைடு காற்று வெளியில் வெளியிடப்படுகிறது. இதில் 15 பில்லியன் டன் கார்பன்-டை-ஆக்சைடு வளிமண்டலத்தில் தங்கி பூமி மேலும் வெப்பம் அடைய காரணமாக அமைகிறது.

திருவிழா மற்றும் பண்டிகை காலங்களின் போது இன்று சுற்றுச்சூழல் சீர்கேடு என்பது மிக அதிகளவில் உள்ளது. இயற்கையான பொருட்கள் பயன்படுத்துவதற்கு பதிலாக செயற்கையான பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் அதிகளவு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

பூமியை சுற்றிலும் காற்று மண்டலம் உள்ளது. அதில்தான் நாம் சுவாசிக்கும் ஆக்சிஜன் உள்ளது. அதிக வெப்பம் அல்லது அதிக குளிரிலிருந்து பூமியின் சமநிலையை காற்று மண்டலம்தான் பாதுகாக்கிறது.

சூரியனிடமிருந்து வரும் வெப்பம் பூமியில் உள்ள மண், நீர், உயிரினங்களால் உறிஞ்சப்படுகிறது. மீதமுள்ள வெப்பம் பசுமைக் குடில் வாயுக்களால் வான் வெளிக்கே திருப்பி விடப்படுகிறது. கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஸ் ஆக்சைடு ஆகிய வாயுக்கள் அதிகமாகும் போது வெப்பம் நேரடியாக பூமிக்கே திருப்பிவிடப்படுகிறது. இதனால் திடீர் வறட்சி, வெள்ளம், கடும் வெப்ப அலைகள் என எதிர்பாராத கால நிலை மாற்றங்களை எதிர் கொள்ள வேண்டி வரும் என்று ஐ.நாவின் சர்வதேச கால நிலை மாற்றத்திற்கான குழு எச்சரித்துள்ளது. எனவே ஆய்வாளர்கள் புவி வெப்பமடைதலின் அபாய விளைவுகளை எதிர் கொள்ள தயாராகுங்கள் என்று எச்சரித்துள்ளனர். எதிர்காலத்தில் உலகில் சில பகுதிகள் வாழ தகுதியற்றதாக மாறிவிடும். அரிதாக நிகழ்ந்த வெப்ப அலை வீச்சு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தாக்கக் கூடும். கடும் மழை மற்றும் சூறைக்காற்றும் இனி அடிக்கடி நிகழும். 2011 ஆம் மே மாதம் உத்திர பிரதேசத்தில் மட்டும் ஒரு மணி நேரத்தில் கடுமையாக புழுதி புயல் தாக்கி 40 பேர் கொல்லப்பட்டனர். 2020க்குள் கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றங்களால் 5 கோடி மக்கள் தாங்கள் வாழும் பகுதியிலிருந்து அல்லது நாட்டிலிருந்து சுற்றுச் சூழல் அகதிகளாக வெளியேறும் அபாயம் உள்ளது.

## திட்டமிடுதல்-Planning

- சுற்றுச்சூழல் சார்ந்த தினங்களை கடைபிடித்து நாமும் நமது கிராமத்தினரும் விழிப்புணர்வு பெறும் வகையில் மாணவர்களே சில நிகழ்ச்சிகளை கொண்டு செல்ல மனித உரிமைக் கல்வி ஆசிரியர் ஒரு கிரியா ஊக்கியாக செயல்பட வேண்டும்.
- சுற்றுச்சூழல் சார்ந்த தினங்கள் வரும் போது முதலில் அத்தினத்தின் சிறப்பு பற்றி மாணவர் மன்றத்தின் மனித உரிமைக் கல்வி ஆசிரியர் அல்லது அவர் மூலம் ஏற்பாடு செய்யப்படும் கருத்தாளர் மூலம் ஏற்பாடு செய்யலாம்.
- தொடர்ந்து அக்குறிப்பிட்ட தினத்தை எவ்வாறு கடைபிடிக்கலாம் என்பதை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலாம் திட்டமிடும் போது தலைப்பு, ஏன் செய்ய வேண்டும், எவ்வாறு செய்வது, யார் செய்வது, எப்படி செய்வது யாரிடம் என்ன உதவி வேண்டும், எத்தகைய பொருட்களை தேவை, எத்தகைய சிரமம் இருக்கும் போன்ற வகைகளில் திட்டமிட வேண்டும்.

***<u>காண்பது என்ன?</u>***

- சுற்றுப்புறச்சூழல் அடிப்படையில் கிராமத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளுதல்.
- இந்த பாடத்தில் நாம் இயற்கை வளங்கள், நீர் சுழற்சி, உணவுச் சங்கிலி, சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் தாவரங்களில் பங்கு, சுற்றுச்சூழல் மாசுக்களால் ஏற்படும் பாதிப்புகள், நுண்ணுயிர்களின் நன்மைகள் மற்றும் தீமைகள், வனங்கள் அழிப்பு மற்றும் பாதுகாப்பு, வன உயிரினங்கள் பாதுகாப்பு.
- குடிநீர் நிலைகள் எவ்வாறு உள்ளன. மாசு அடைந்த நிலையில் உள்ளதா என்பதையும் காணுதல்.
- கிராமத்தில் போதிய அளவில் மரங்கள் உள்ளதா? அல்லது வெட்டப்பட்டுள்ளதா? அல்லது அல்லது மரங்களே இல்லையா என்பதை அறிதல்.
- மண்ணின் தன்மையை பாதிக்கும் செடிகளை அடையாளம் காணுதல்.

- உங்கள் ஊரில் ஆறு, குளம், ஏரி, குட்டைகள் உள்ளதா? அதில் கழிவு நீர் கலக்கிறதா? என்று காணுங்கள்.
- நம் ஊரில் அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கும் கருவேலமரம் என்னும் வேலிக்காத்தான் (Prsois juliglora) என்ற மரம் 1950 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வந்து விறகு தேவையை பூர்த்தி செய்ய விதைக்கப்பட்டது. விறகாவதைத் தவிர மற்ற எந்த விதத்திலும் பயன்படுத்த முடியாத ஒரு மரமாக உள்ளது. இதனால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதோடு அதிகளவு நீரையும் எடுத்துக் கொள்கிறது. இதனால் பிற செடி, கொடிகள், மரங்கள் வளரா நிலைக்கு தள்ளப்படுகிறது.
- மக்களிடம் சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு உள்ளதா? என்பதை காணுங்கள்.

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

- கருத்தாளர்களை அழைத்து சுற்றுச்சூழல் குறித்து கருத்துரை வழங்கக் கோரலாம்.
- பயன்தரும் மர செடிகளை வேளாண்மை துறையிடம் கேட்டு பெறலாம்.
- போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்த சுற்றுச்சூழல் சார்ந்த பணி செய்யும் தன்னார்வ அமைப்புகளை அழைக்கலாம்.
- உள்ளூர் இளைஞர்களை கிராம ஆய்விற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.
- சுற்றுச்சூழல் குறித்த கையேடுகளை உள்ளூர் நபர்கள் அல்லது ஊராட்சி தலைவரிடம் கேட்டு பெறலாம்.

## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

- சுற்றுச்சூழல் சார்ந்த தினங்களை மையப்படுத்தி வெவ்வேறு வடிவங்களில் இப்பணியை கொண்டு செல்லலாம்.
- தலைமையாசிரியரின் ஒப்புதலுடன் மனித உரிமைக் கல்வி ஆசிரியர் இந்நிகழ்வுகளை நெறிப்படுத்துவார்.
- மனித உரிமை மாணவர் மன்றத்தின் வெவ்வேறு பணிக் குழுவை சார்ந்தவர்கள் இச்செயல்பாடுகளை மையப்படுத்தி கொண்டு செல்வார்கள்.

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

<u>**செயல்பாடு-01**</u>

<u>**படிநிலை-01-கிராமத்தில் சுற்றுச்சூழல் நிலையை அறிந்து கொள்ளுதல்.**</u>

- மாணவர் மன்றத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த தினங்களை கேட்டுக் கொள்ள வேண்டும். அதன்படி உலக பூமி தினம், நீர் தினம், சுற்றுச்சூழல் தினம் போன்ற தினங்களை கடைபிடிக்கலாம்.
- குறிப்பிட்ட தினங்களை கடைபிடிப்பதற்கு முன்பு அத்தினம் சார்ந்த விசயத்தில் உங்கள் கிராமத்தின் நிலை என்ன என்பதை அறிந்து கொள்ளுதல்.
  - o கிராமத்தில் போதிய அளவில் மரங்கள் உள்ளதா? என்பதை அறிதல்.
  - o கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படுகிறதா? அல்லது நேரடியாக நீர்நிலைகளில் கலந்து அசுத்தத்தை ஏற்படுத்துகிறதா?

- ஊராட்சி நிர்வாகம் மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனியாக பிரித்தெடுத்து அப்புறப்படுத்தப்படுகிறதா? என்பதை கவனியுங்கள்.
- பிளாஸ்டிக்குகள் முறையாக மறுசுழற்சிக்காக சேகரிக்கப்படுகிறதா என்பதை கவனியுங்கள் அல்லது தாறுமாறாக வீசப்படுகிறதா? என்பதையும் கவனியுங்கள்.
- மின்னணுக் கழிவுகளான டிவி, ரேடியோ, கேமரா, சிடி உள்ளிட்ட பொருட்கள் அப்படியே வீசப்படுகிறதா என்பதை அறியுங்கள்.
- வீடுகளில் மழை நீர் சேகரிக்கும் அமைப்புகள் உள்ளதா என்பதை கவனியுங்கள்.
- மழை பொழியும் போது நீர் எங்கு செல்கிறது என்பது கவனியுங்கள் அல்லது கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். ஏரி, குளங்கள், குட்டையை அடைகிறதா? அல்லது வீணாக செல்கிறதா? என்பதையும் கவனியுங்கள், அல்லது கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.
- ஏரி, குளம், குட்டைகள் முழுமையாக பராமரிக்கப்படுகிறதா? என்பதை கவனியுங்கள்.
- விவசாயத்திற்கு இயற்கை உரங்களான, கால்நடையின் கழிவுகள், தழைகள், இலைகள், மண்புழு உரங்களை பயன்படுத்துகிறார்களா? அல்லது யுரியா, பொட்டாஷ் போன்றவை இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகிறதா என்பதை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.
- மண்ணிற்கு கேடு விளைவிக்கும் வேலிகாத்தான் (கருவேலம்) மற்றும் இதர செடிகள் உள்ளதா என்பதை கவனிக்கவும். இது தொடர்பான விழிப்புணர்வை முதலில் நமது குடும்பத்தில் ஏற்படுத்த வேண்டும். தொடர்ந்து ஒரு நாள் மாணவர்கள் 5 பேர் கொண்ட குழுக்களாக பிரிந்து வீடு தோறும் சென்று பாதிப்பு ஏற்படுட்தும் வேலிகாத்தான் மரம் மற்றும் இதர செடிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கிராமத்தில் மேற்கண்ட மரங்கள் மற்றும் செடிகள் இல்லாத கிராமமாக உருவாக்குவோம்.
- மரம் நடும் விழாவை ஆண்டு தோறும் நடத்தலாம். பள்ளி தலைமையாசிரியர் ஒப்புதலுடன் வேளாண்மை மற்றும் வனத்துறையை அணுகி நமக்கு தேவையான மரக் கன்றுகளை பெறலாம். உதாரணத்திற்கு பூஞ்சோலை திட்டம் என்ற திட்டத்தை ஆரம்பித்து பசுமையான கிராமமாக உருவாக்கலாம்.
- பள்ளி விழாக்கள், பிறந்த நாள் உள்ளிட்ட குடும்ப விழாக்களில் மரக் கன்றுகளை தரும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தேவைப்பட்டால் பள்ளியிலேயே ஒரு நாற்றாங்கால் ஏற்படுத்தலாம்.
- சுற்றுச் சூழல் பாதிப்புகள் குறித்து போட்டிகள் நடத்தலாம். குறிப்பாக கட்டுரை, கதை, ஓவியப் போட்டிகளை நடத்தலாம்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படும்.
- இளம் சுற்றுச்சூழல் காப்பாளர்களாக வளர்வார்கள்.
- தாங்கள் வாழும் பகுதியை சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் சிறந்த சுற்றுச்சூழல் கிராமமாக உருவாக்குவார்கள்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- பள்ளியில் செயல்படும் பசுமைப் படை, நேரு யுவகேந்திரா, சுற்றுச்சூழல் அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள், முன்னாள் மாணவர்கள்.

## மனித உரிமைக் கல்வி ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், நெறியாளர்களுக்கான வழிகாட்டி-Guide for HRE Teachers, Coordinators and Facilitators.

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

**பிரிவு-48 A**

சுற்றுச்சூழலை பாதுகாத்து வளப்படுத்துவதையும் நாட்டின் வளங்கள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாப்பதையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

**பிரிவு-51 A(G)**

வனங்கள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வனவிலங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாத்து வளப்படுத்துவது, உயிர் ஜீவன்கள் மீது பரிவு காட்டுவது இந்திய குடிமக்களின் கடமையாக இருக்க வேண்டும்.

**பிரிவு-21**

சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறையில் இல்லாமல் வேறு விதத்தில் ஒரு நபரின் உயிரையோ அல்லது தனிநபர் சுதந்திரத்தையோ பறிக்கக் கூடாது (உச்ச நீதிமன்றட்தின் தீர்ப்பின் வாயிலாக சுற்றுச்சூழல் பாதுகாப்பும் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது)

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைக் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

**பிரிவு-12**

அ. சுற்றுப்புறச் சூழலையும், தொழிற்சாலைகளையும் சுகாதாரமான முறையில் மேம்படுத்த வேண்டும்.

ஆ. தொற்றிக் கொள்ளக் கூடிய குறிப்பிட்ட இடத்தில் மக்களுக்கு தோன்றக் கூடிய, தொழில் சார்ந்த மற்றும் பிற நோய்களை தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் சிகிச்சை அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்-1986

**பிரிவு-05**

ஒரு ஆலையை மூடவோ, தடை செய்யவோ, ஒழுங்குப்படுத்தவோ, அதன் உற்பத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ, அதற்கு விநியோகிக்கப்படும், மின்சக்தி, நீர் மற்றும் பிற சேவைகளை கட்டுப்படுத்தவோ, முற்றிலும் தடை செய்யவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

**பிரிவு-10**

அரசு அதிகாரிகள் ஆலைக்குள் நுழைந்து ஆய்வு செய்ய அதிகாரம் உண்டு.

**பிரிவு-11**

எந்த இடத்திலிருந்தும் சோதனைக்காக காற்று, நீர், மண் அல்லது வேறு எந்த ஒரு பொருளையும் மாதிரியாக எடுக்க அதிகாரம் வழங்குகிறது.

## முக்கிய உச்சநீதிமன்ற தீர்ப்புகள்

**சுபாஷ் எதிர் பீகார் அரசு-1991**

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 21யு என்பது மாசற்ற தூய காற்று பெறும் (சுற்றுச்சூழல்) உரிமையும் வாழ்வுரிமையின் உள்ளடக்கமாகும்.

**மகேந்திரசிங் சாவ்யா எதிர் பஞ்சாப் அரசு-1997**

நலத்திற்கான உரிமையும் வாழ்வுரிமையின் உள்ளடக்கம்.

**சுபாஷ்குமார் எதிர் பீகார் அரசு-1991**

சிறப்பான வாழ்க்கையை மேற்கொள்ள தூய நீர் மற்றும் மாசற்ற காற்றும் அவசியம்.

**மகேந்திரசிங் சாவ்யா எதிர் பஞ்சாப் அரசு-1997**

நலத்திற்கான உரிமையும் வாழ்வுரிமையின் உள்ளடக்கம்.


**எம்.சி.மேத்தா எதிர் மத்திய அரசு-1988**

கங்கை நதியில் சுத்திகரிக்கப்படாத மற்றும் மாசடைந்த நீர் மற்றும் கழிவுகளை கலக்கக் கூடாது.

புவி வெப்பமயமாக்கலுக்கு காரணமான வாயுக்களை அதிகம் வெளியிடும் நாடுகள்

| நாடுகள் | Co2 வெளியிடும் அளவும் (டன்னில்) | Co2 வெளியிடும் அளவும் (%) |
|---|---|---|
| அமெரிக்கா | 20.6 | 20.9 |
| பிரிட்டன் | 9.8 | 2 |
| ஜெர்மனி | 9.8 | 2.8 |
| ஜப்பான் | 9.9 | 4.3 |
| கனடா | 20 | 2.2 |
| சீனா | 3.8 | 17.3 |
| பிரேசில் | 1.8 | 1.3 |
| தென்ஆப்ரிக்கா | 9.8 | 1.5 |
| இந்தியா | 1.2 | 4.6 |

Source-HDR 2007. Ministry of Environment and Forest



# 08.சாலை விபத்தில்லா சேதம்




## அறிமுகம்-Introduction

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரப்படி அதிக சாலை விபத்து நடக்கும் நாடாக இந்தியா உள்ளது. அதிகளவு மக்கள் தொகை கொண்ட சீனாவில் கூட இந்தியாவை காட்டிலும் சாலை விபத்துக்கள் குறைவாக உள்ளது. 2030 இல் உலகில் மக்களை பாதிக்கும் கொடிய நோய்களையடுத்து ஐந்தாவது இடத்தில் சாலை விபத்துக்கள் உள்ளன. இதில் 90 சதவீத விபத்துக்கள் நம்மைப் போன்ற வளரும் மற்றும் ஏழை நாடுகளில் நடைபெறுகிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிபரப்படி இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 13 நபர்கள் சாலை விபத்தால் மரணமடைகிறார்கள். 2007இல் இந்தியாவில் மட்டும் 1.14. இலட்சம் மக்கள் சாலை விபத்தால் மரணமடைந்துள்ளனர். ஐ.நாவின் சாலை பாதுகாப்பிற்கான ஒத்துழைப்பு மற்றும் ஆணையத்தின் கூற்றுப்படி ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் 1.2 மில்லியன் மக்கள் சாலை விபத்துக்களால் மரணமடைகிறார்கள் என்றும் 20 முதல் 25 மில்லியன் மக்கள் நிரந்தர ஊனமடைகிறார்கள் என்றும் கூறுகிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிபரப்படி இந்தியாவில் அதிக விபத்துக்கள் நடக்கும் 5 மாநிலங்களை அடையாளப்படுத்தியுள்ளது. அவை 1. மகாராஷ்டிரா-16.4, 2. தமிழ்நாடு-12.0, கேரளா-9.1, கர்நாடகா-9.4, ஆந்திர பிரதேசம்-9.5. அதே போல் சாலை விபத்தால் அதிக மரணம் ஏற்படும் 5 மாநிலங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது. அவை. ஆந்திரபிரதேசம்-12.1, மகாராஷ்டிரம்-10.7, உத்திரபிரதேசம்-10.3, தமிழ்நாடு-10.4, கர்நாடகா-7.5. தமிழக அரசின் சாலை பாதுகாப்பு கொள்கை-2007 இன்படி தமிழகத்தில் ஆண்டிற்கு 51.000 சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றது என்றும் அதில் சராசரியாக 10000 பேர் மரணமடைகின்றனர் என்றும் கூறுகிறது. பெரும்பாலும் 15 வயது முதல் 29 வயதுள்ளவர்கள் சாலை விபத்துக்கள் நிகழ காரணமாக உள்ளனர்.

தமிழக அரசின் புள்ளிவிபரப்படி 1993 ஆம் ஆண்டு 34925 விபத்துக்களில் 7349 நபர்கள் மரணமடைந்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு 60794 விபத்துக்களில் 15409 நபர்கள் மரணமடைந்துள்ளனர். 2010 ஆம் ஆண்டு மட்டும் தமிழகத்தில் இரு சக்கர வாகனங்களால் 19086 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அதில் 3835 பேர் மரணமடைந்துள்ளனர். கார்,ஜீப் போன்ற வாகனங்களால் 18038 விபத்துக்களில் 3651 நபர்கள் மரணமடைந்துள்ளனர். 8890 பேருந்து விபத்துகளால் 2553 பேர் உயிரிழந்துள்ளனர். விலைமதிப்பற்ற உயிர்கள் மனித தவறுகளால் இன்று தாறுமாறாக கொல்லப்படுகின்றன.

***சாலை விபத்துகளுக்கான காரணங்கள்***

விதிகளை மதிக்காமல் இருப்பது, அதிவேகமாக, கண்முடித்தனமாக செல்வது, சாலைகளுக்கு ஏற்ற வேகத்தில் செல்லாதது, சீட் பெல்ட் அணியாதது, தலை கவசம் இல்லாமல் செல்வது. போதையில் வாகனம் ஓட்டுவது, கவனக் குறைவாக ஓட்டுவது அல்லது சாலையைக் கடப்பது, சரியான சாலை பாதுகாப்பு விதிகள் நடைமுறைப்படுத்தாதது போன்ற காரணங்கள் பிரதானமாக அமைகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் ஜனவரி 1 முதல் 7 வரை சாலை பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது. அதேபோல் ஐ.நா சபையும் சாலை பாதுகாப்புக்கான பத்தாண்டுகள் என்று 2011 முதல் 2020 வரை பிரகடனப்படுத்தியுள்ளது. நாமும் கரம் கோர்ப்போம்; விபத்துக்கள் இல்லாத கிராமத்தையும், தேசத்தையும் கட்டமைப்போம்.

## திட்டமிடுதல்-Planning

- தலைமையாசிரியர் அனுமதியுடன் மனித உரிமை மாணவர் மன்றத்தில் சாலை விதிகள் குறித்து ஆசிரியர் அல்லது பொருத்தமான கருத்தாளரை அழைத்து சாலை விதிகளின் அவசியத்தை எடுத்துக் கூறலாம்.
- குழந்தைகளை நேரடியாக சாலைப் பகுதிக்கு அழைத்து சென்று கிராமத்தின் நிலை எப்படி உள்ளது என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

## சாலை பாதுகாப்பில் நாம் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்ன?

- மக்கள் சாலை பாதுகாப்பு விதிகள் பற்றி எந்தளவு அறிந்துள்ளனர்.
- மக்கள் சாலை விதிகளை கடைபிடிக்கின்றனரா?
- சாலைகளில் தேவையான இடங்களில் பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய அடையாளங்கள், குறியீடுகள் முறையாக வைக்கப்பட்டுள்ளதா?
- சாலைகளின் தன்மை எவ்வாறு உள்ளது. (குறுகிய, வளைவுகள் மிக்க, அபாயகரமான)
- இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் முறையாக தலைக் கவசம் அணிந்து செல்கிறார்களா?
- வாகனங்களை முறையாக நிறுத்துகிறார்களா அல்லது மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நிறுத்துகிறார்களா?
- சமீபத்தில் சாலை விபத்து நடந்துள்ளதா? எம்மாதிரியான பாதிப்புகள் ஏற்படுகிறது?.
- பேருந்துகளை முறையாக அவற்றிற்குரிய நிறுத்தங்களில் நிறுத்துகிறார்களா?

- பேருந்து மற்றும் வேன், ஜீப் போன்ற வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட பயணிகளை ஏற்றுகிறார்களா? அல்லது அதிகமான பயணிகளை ஏற்றுகிறார்களா?
- வாகனத்தை இயக்கும் போது கவனத்தை சிதறும் வகையில் ஓட்டுனர்கள் நடந்து கொள்கிறார்களா? (உதாரணத்திற்கு செல்போன் பேசுவது, அருகில் உள்ளவரிடம் தொடர்ந்து பேசி வருவது மற்றும் இதர காரணங்கள்.)

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

- கிராமத்தில் சாலைப் பாதுகாப்பு பற்றி அனுபவம் உள்ளவரை அணுகலாம். அல்லது ஓட்டுனர் பயிற்சி பள்ளியைச் சார்ந்தவர்களை அழைக்கலாம்.
- உள்ளூரில் அனுபவம் உள்ள நபர்களை உதவிக்கு அழைக்கலாம்.
- அனைவருக்கும் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களை அழைக்கலாம்.

## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் மற்றும் மனித உரிமை மாணவர் மன்ற பொறுப்பாளர்கள்.
- சாலை பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கும் போது நாமும் நம் செயல்பாடுகளை கொண்டு சென்றால் அனைவரின் ஒத்துழைப்பும் முழுமையாக இருக்கும்.

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

### செயல்பாடு-01

#### படிநிலை-01

- முதலில் சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து நல்ல கருத்தாளரை அழைத்து கருத்துரை வழங்கச் செய்யலாம்.
- சாலைகளில் செல்வோர் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் சாலையில் நடப்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிகள் ஆகியவற்றை விளக்கலாம்.

#### படிநிலை-02

- மக்கள் சாலை விதிகளை எவ்வாறு கடைபிடிக்கின்றனர் என்பதை சாலையின் ஓரமாக அமர்ந்து கவனிக்கலாம். அதில் சாலைகள் பாதுகாப்பாக உள்ளதா? வாகனத்தை இயக்குபவர்கள் முறையாக இயக்குகிறார்களா? மக்கள் சாலைகளை கடக்கும் போது விழிப்புணர்வுடன் கடக்கின்றனரா? அல்லது என்ன நடக்க போகுது என்று கடக்கின்றனரா?
- வாகனங்களை சாலையில் செல்வோர் எங்கு நிறுத்துகிறார்கள், பிறருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நிறுத்துகிறார்களா? நிறுத்துவதற்கு இடமில்லையா அல்லது என்ன நடக்க போகுது என்ற கண்ணோட்டம் உள்ளதா?
- பயணிகளை ஏற்றும் வாகனங்களில் அதிகளவு பயணிகளை ஏற்றுகிறார்களா? என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.
- வாய்ப்பிருந்தால் அருகில் உள்ள போக்குவரத்துக் காவலர் அல்லது காவல் நிலையத்திற்கு சென்று போக்குவரத்து தொடர்பான விதிமுறைகள் மற்றும் பொதுவான விதிமீறல்கள் குறித்து கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**படிநிலை-03**

- சாலைகளில் பாதுகாப்பு முறைகள் உள்ளதா? என்று உற்றுநோக்கி தகவல்களை சேகரிக்கவும்.
- அடையாளக் குறியீடுகள்-சாலை வளைவு, பள்ளி, மருத்துவமனை, பேருந்து நிறுத்தம், மக்கள் கடக்கும் பகுதி, பெரிய சாலை சந்திப்பு, இரயில் பாதை குறுக்கீடு மற்றும் இன்னும் பிற அடையாளங்கள்.

**படிநிலை-04**

- தாங்கள் அறிந்த தகவல்களை அடிப்படையாக வைத்து காலை வழிபாட்டு நேரத்தில் நாம் சாலைகளில் செல்லும் போது என்ன செய்ய வேண்டும் என்று சில வழிகாட்டுதல்களை வழங்கலாம்.
- மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்து கட்டுரைப் போட்டி நடத்தலாம்.
- முழக்கங்கள் தயார் செய்யக் கோரலாம்.

**படிநிலை-05**

- சாலை பாதுகாப்பு பற்றி முதலில் தமது குடும்பத்தில் எடுத்துக் கூறுவார்கள்.
- தலைமையாசிரியர் ஒப்புதலுடன் மனித உரிமைக் கல்வி ஆசிரியரின் மேற்பார்வையில் ஒரு வீதி நாடகத்தை தயார் செய்து கிராமத்தின் முக்கிய இடங்களில் வீதி நாடகம் நடத்துவார்கள்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- சாலை பாதுகாப்பு விதிமுறைகளை மாணவர்கள் தெரிந்து கொள்வார்கள்.
- சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தியிருப்பாகள்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- உள்ளூர் காவல் துறையினர், ஓய்வுப் பெற்ற காவல் துறையினர், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், தேசிய சாரணர் இயக்கத்தினர், நாட்டு நலப் பணித் திட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் போக்குவரத்துத் துறையினர்.

## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள்

**பள்ளி வாகனங்கள் குறித்த உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள்**

1. பள்ளி வாகனங்கள் அனைத்தும் மஞ்சள் நிறத்தில் இருக்க வேண்டும்.
2. வாகனத்தின் முன்னும் பின்னும் பள்ளி வாகனம் என்று எழுத வேண்டும்.
3. பள்ளி வாகனத்தில் முதலுதவி பெட்டி உள்ளதை உணர்த்தும் வகையில் தெளிவாக அடையாளப்படுத்த வேண்டும்.
4. வாகனத்தில் வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
5. கதவுகள் பக்கவாட்டில் திறக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.
6. வாகனத்தில் தீ அணைப்பான் இருக்கு வேண்டும்.

7. பள்ளியின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களை வாகனத்தில் எழுத வேண்டும.

8. பள்ளி வாகனத்தின் கதவுகள் முறையாக மூடும் வகையில் இருக்க வேண்டும்.

9. மாணாக்கரின் பை மற்றும் புத்தகங்களை வைக்கும் வகையில் வாகனத்தில் ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

10. பள்ளி வாகனத்தில் தகுதியான உதவியாளர் கட்டாயம் இருக்க வேண்டும்.

11. அவ்வப்போது பெற்றோர் அல்லது ஆசிரியர்கள் வாகனத்தில் பயணம் செய்து பாதுகாப்பு நெறிகளை உறுதி செய்ய வேண்டும்.

12. குறைந்த பட்சம் 5 வருடங்கள் கனகர வாகனங்களை இயக்கிய அனுபவம் உள்ளவராக இருக்கு வேண்டும்.

13. வாகனங்களை இயக்கும் போது விபத்து அல்லது விதிகளை மீறியவர்களை பணியமர்த்தக் கூடாது.

14. அதிக வேகம், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர், அபாயகரமாக ஓட்டுபவர் போன்ற நபர்களை பணியமர்த்தக் கூடாது.

மோட்டார் வாகனச் சட்டம்-1988ன்படி பெர்மிட் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தரச் சான்றிதழ் பெற வேண்டும்.

## தில்லி போக்குவரத்துக் காவல்துறையின் வழிகாட்டுதல்கள்

**நடந்து செல்வோருக்கு**

1. நடைபாதையில் மட்டுமே நடந்து செல்ல வேண்டும். நடைபாதை இல்லாத இடங்களில் வலது புறமாக செல்ல வேண்டும்.

2. சாலையில் வேகமாக செல்வது மற்றும் ஓடக்கூடாது.

3. சாலையைக் கடக்கும் இடத்தில் மட்டும் கடக்க வேண்டும். அதற்குரிய நடைப்பாலங்களை பயன்படுத்த வேண்டும். அல்லது பாதுகாப்பான இடத்தில் கடக்க வேண்டும்.

4. சாலையைக் கடக்கும் சமிக்கை வந்த பின்பே கடக்க வேண்டும். அல்லது மஞ்சள் விளக்கு எரிந்த பின்பே கடக்க வேண்டும்.

5. வாகனத்தை ஒரு பக்கம் நிறுத்தியபின் மறுபக்கம் கடக்க வேண்டும் என்றால் கவனமாக இருபுறமும் கவனித்து கடக்க வேண்டும்

6. ஒரு வழிபாதையாக இருந்தால் வாகனங்கள் வேகமாக செல்லும் அதனால் மிக கவனமாக செல்ல வேண்டும்.

7. வளைவுகள் மற்றும் குறுகிய சந்துகளில் கடப்பதை தவிர்க்க வேண்டும் வாகனங்கள் வேகமாக வரும்.

8. சாலையை கடக்க ஓடுவது என்பது தவறு. தவறி விழுவதற்கு வாய்ப்பு உள்ளது.

## பேருந்தில் செல்வோருக்கு


1. வீட்டிலிருந்து முன்கூட்டியே செல்ல வேண்டும். ஓடிப் போய் பேருந்தை பிடிக்கக் கூடாது
2. வண்டி அதற்குரிய இடத்தில் வந்து நின்ற பின்பு ஏற வேண்டும். வரும் போதே மற்றவர்களை தள்ளி ஏறுவது விபத்து ஏற்பட அதிகம் வாய்ப்பு உள்ளது
3. பேருந்தில் சத்தம் போடுவது மற்றவர்களை பாதிக்கும் செயலாகும்.
4. ஊர்களின் நிறுத்தம்தானா என்று பார்த்து இறங்க வேண்டும்.
5. பேருந்தில் நின்று கொண்டு செல்லும் போது கைப்பிடியை கவனமாக பிடித்துக் கொள்ளவும்.
6. பேருந்தில் கதவு அருகே நின்று கொண்டு பயணம் செய்யாதீர்.
7. கை, தலைகளை வெளியே நீட்டாதீர்
8. பேருந்தில் பயணம் செய்வதற்கான அனைத்து விதிகளையும் கடைபிடியுங்கள்.

## பள்ளி செல்லும் குழந்தைகளின் பெற்றோருக்கு

1. பள்ளி செல்லும் குழந்தைகளின் பாதுகாப்பான பயணத்திற்கு பெற்றோரும் சரிபாதி பொறுப்பாவர்.
2. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப பள்ளி வாகனம் அல்லது தாமே ஏற்பாடு செய்யும் வாகனம் உகந்ததாக இருக்குமா என்று ஆய்ந்து ஏற்பாடு செய்ய வேண்டும்.
3. பள்ளி வாகனங்களின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பிரச்சனைகள் இருப்பின் பள்ளி நிர்வாகத்திடம் தெரிவிக்க வேண்டும்.
4. பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். அதில் பாதுகாப்பான வாகன பயணம் குறித்தும் விவாதிக்க வேண்டும்.
5. பெற்றோர் கொண்டு சென்று விடும் குழந்தைகளை அவர்கள் கவனமுடன் விட வேண்டும்.
6. பெற்றோர் தமது குழந்தைகளுக்கு சாலை விதிகள் குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். பாதுகாப்பாக சாலைகளை கடக்க கற்றுக் கொடுக்க வேண்டும்.
7. குழந்தைகளை வாகனங்கள் ஓட்ட அனுமதிக்காதீர்.
8. சட்டங்களையும் விதிகளையும் தனது குழந்தைகளுக்கு கற்று கொடுக்க வேண்டும்.
9. பெற்றோர் குழந்தைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

## போக்குவரத்து சமிக்கைகள்


## 1.கட்டாய சமிக்கைகள்




## 2. எச்சரிக்கை சமிக்கைகள்



## 3.தகவல் சமிக்கைகள்




தகவல்– தமிழ்நாடு போக்குவரத்து காவல் துறை, கோவை மாநகர பிரிவு,
http://www.trafficwardens.in/road_signs.html#



# 09. குடி நோய் எனும் அரக்கன் ஒழிய...



## அறிமுகம்-Introduction

இந்த பாடத்தில் நாம் அறிந்து கொள்ளவுள்ள தகவல் என்ன தெரியுமா? இன்று பல குடும்பங்களில் சீரழிவிற்கும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகவும் காரணமாக உள்ள குடிநோய் பற்றியதுதான். பொதுவாக சும்மாக ஜாலிக்குதான் குடிக்கிறோம் என்று இளைஞர்களும் இன்னும் சிலர் கவலைகளை மறப்பதற்கும், உடல் வலியை போக்கவும் குடிக்கிறோம் என்றும் சொல்லுவார்கள். தொடர்ந்து அவர்கள் பல்வேறு சாக்கு போக்குகளை கூறி குடிப்பதால் நாளடைவில் குடிநோய்க்கு இலக்காகி போதை இல்லை என்றால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதன் உச்சமாகதான் குடும்பத்தில் பிரச்சனை, படிப்பில் கவனமின்மை, இலக்கை நோக்கி செல்லாமை, பணிகளில் முழுமையான கவனமின்மை, உடல் நலக் குறைவு, இறுதியாக மரணத்தில் போய் முடிகிறது அவர்களின் வாழ்க்கை.

இந்தியாவில் மட்டும் 7.5 கோடி பேர் குடிநோய்க்கு ஆளாகியுள்ளனர் என்று மத்திய சமூக நீதித் துறை தனது ஆய்வில் கூறுகிறது. இதில் 12 முதல் 18 வயதுள்ளவர்களின் எண்ணிக்கை 21.4 சதவீதம் என்பது நம்மை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. பெரும்பாலும் சிறு நகரங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில்தான் அதிகமாக போதைக்கு இலக்காகின்றனர். பெட்ரோல் மற்றும் ஆயுதம் விற்பனைக்கு அடுத்து போதைப் பொருள் விற்பனை 3வது இடம் வகிக்கிறது. ஐ.நா சபை ஜுன் 26 ஆம் தேதியை போதைப் பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்எகதிரான சர்வதேச தினமாக அனுசரிக்கிறது.

எனவே இப்பாடத்தில் குடிநோய் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் அறிந்து கொள்வது மட்டுமல்லாமல் நம் கிராமத்தை குடிநோய் இல்லாத கிராமமாக மாற்ற நாம் சில முயற்சிகளை செய்ய வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறோம்.

## திட்டமிடுதல்-Planning

- தலைமையாசிரியர் அனுமதியுடன் மனித உரிமை மாணவர் மன்றத்தில் குடிநோய் குறித்து ஆசிரியர் அல்லது பொருத்தமான கருத்தாளரை அழைத்து கருத்துரை வழங்க செய்யலாம்.
- மாணவர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி தங்கள் குடும்பத்தில், உறவினர்கள், தெரிந்தவர்கள் குடிநோயால் பாதிக்கப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள்.
- பள்ளியில் உள்ள இதர மாணவர்களிடம் குடிநோய் குறித்து கலந்துரையாடி எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை பற்றியும் அதற்கு அவர்கள் சொன்ன காரணங்களையும் தொகுக்க வேண்டும்.
- இறுதியாக குடிநோயின் பாதிப்பு குறித்த விழிப்புணர்வை பள்ளியில், குடும்பத்தில் ஏற்படுத்துவார்கள். பின்பு கிராமத்தில் பல்வேறு முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள்.

## குடிநோய்

இந்தியாவில் மரணத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணங்களில் குடிநோயும் ஒன்று. நம் நாட்டில் உள்ள மனநல மருத்துவமனைகளில் குடிநோயால் பாதிக்கப்பட்டு சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இளம் பருவத்தினரிடையே குறிப்பாக மாணவர்களிடம் போதை மற்றும் குடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவது கவலை அளிக்கும் அம்சமாக உள்ளது. போதை காரணமாக ஏற்படும் பல்வேறு உடல் பாதிப்புகள், படிப்பில் ஆர்வமின்மை போன்றவை உடனடி விளைவுகளை ஏற்படுத்தும். இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு குடிபெரும் தடையாக உள்ளதால் குடும்பங்கள் மற்றும் சமுதாயமும் சீரழிவிற்கு உள்ளாகிறது. குறிப்பாக குடும்பங்களில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

### குடிநோய் (ஆல்கஹாலிசம்) என்றால் என்ன?

தீவிரமான, தொடர்ந்த உடல், மனப்பாதிப்பை ஏற்படுத்தி இறுதியில் மரணத்தை ஏற்படுத்தும்.

### ஆல்கஹால் ஒரு போதை பொருளா?

ஆம் ஆல்கஹால் குடித்தவுடன் விரைவிலேயே ரத்த ஓட்டத்தில் கலந்துவிடுவதால் நேரடியாக மூளைக்கு செல்வதன் விளைவே போதை எனப்படும். இயல்பான நடவடிக்கையிலிருந்து மாற்றம் ஏற்படும். போதை ஊக்கத்தை அழித்து சோர்வை ஏற்படுத்தும்.

### குடிநோய் (ஆல்கஹாலிசம்) தொடர்பாக மக்களிடம் உள்ள தவறான கருத்துக்கள்

- தினமும் சிறிதளவு மது குடிப்பது நல்லது.
- சில மது வகைகள் உடல் நலத்திற்கு நல்லது. உடல் அழகாகும்.
- குடிப்பதால் கவலையிலிருந்து விடுபடலாம்.
- குடித்தால் பயம் போகும். தைரியமாக பேசலாம்.
- நல்ல தூக்கம் வரும்.

- களைப்பு இல்லாமல் வேலை செய்யலாம்.
- ஜலதோஷம், இருமல் போன்றவற்றை போக்கிவிடும்.
- நண்பர்கள் வருத்தம் அடைவார்கள் அதனால் குடிப்பதே நல்லது.
- சமூகத்தில் இதுவும் ஒரு தேவை. அரசே விற்பனை செய்கிறது அதனால் குடிப்பதில் என்ன தவறு இருக்கு என்று கூறுவார்கள்.

## குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதன் அறிகுறிகள்

- உடல் ஆரோக்கியம் கெட்டு போதல்
- உடலில் ஒரு வித துர்நாற்றம்
- பள்ளிக்கு செல்லாதது, வேலைக்கு செல்லாதது
- தீய செயல்களில் ஈடுபடுவது.
- வழக்கமான நண்பர்களைத் தவிர்த்து புதிய நண்பர்களுடன் சேர்தல்
- புதிய நண்பர்கள் பற்றிய விபரங்களை ரகசியமாக வைத்திப்பது.
- வீட்டு விசயங்களில் ஒதுங்கி இருப்பது. செயல்பாடுகளை ரகசியமாக வைத்திருப்பது.
- ஈடுபாடு குறைவு மற்றும் சோர்வாக கணப்படுதல். அதிக நேரம் தூங்குவது.
- உடல் சுத்தத்தில் கவனமின்மை, தொடர்ந்து அழுக்கான ஆடைகளை அணிந்திருப்பது.
- பணத்திற்காக திருடுவது அல்லது வீட்டில் இருக்கும் பொருட்களை விற்பது. அதிகம் பொய் சொல்வது.

## குடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள்

- மூளையின் செயல்பாடு பாதிக்கப்படுவதால் மனித நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- மூளையில் உள்ள Gamma-aminobutyric acid - GABA உணர்ச்சி வசப்படும் தன்மையை கட்டுப்படுத்தும். ஆனால் போதை அதிகமாகும் போது அதன் செயல்பாடு பாதிக்கப்பட்டு அதீத உணர்ச்சி வசப்படும் போக்கு வெளிப்படும்.
- மூளை செல்களில் நிரந்தரமாக பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- இதயத்தின் செயல்பாட்டை பாதிக்கும்.
- தூங்கும் முறையில் பாதிப்பை ஏற்படுத்தும்.
- கூர்மையாக பார்க்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்தும்.
- தசை கட்டுப்பாடு இருக்காது, தொடு உணர்வு குறையும், சிந்தனை, புரிந்துணர்வு, மதிப்பிடும் தன்மை ஆகியவை பாதிக்கப்படும்.
- வாய் வார்த்தை குளறுதல், நடையில் தள்ளாட்டம், அதிக மயக்கம், ஞாபக மறதி, பார்வை திறன் குறைதல், அதிக குழப்பம் ஏற்படும்.
- கல்லீரல் நிரந்தரமாக பாதிக்கப்படும்– மஞ்சள் காமாலைக்கு வழிவகுத்து மரணத்தை ஏற்படுத்தும்.

- வயிற்றில் (சீரண மண்டலத்தில்) பாதிப்பை ஏற்படுத்தி பலவகையான நோய்களுக்கு காரணமாக அமைகிறது. குறிப்பாக அல்சர் எனப்படும் வயிற்றுப் புண், சீரண சுரப்பிகள் பாதிப்பு, கேன்சர் எனப்படும் வயிற்று புற்றுநோய் போன்றவைகள் ஏற்படுகிறது.
- மரபு ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

**Source- http://www.addictionindia.org/**

## குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சனைகள்

- பொருளாதாரம் சார்ந்த இழப்பு. குடும்பச் செலவுகளை பூர்த்தி செய்ய முடியாமை, அதிக கடன் வாங்குவது. சொத்துக்கள் இழப்பு, போன்றவை ஏற்படும்.
- குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டு அமைதியின்மை, சந்தேகப்படுதல், அடித்தல் மற்றும் மன ரீதியான சித்திரவதைகளுக்கு உட்படுத்துவது.
- குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படுதல், குழந்தைத் தொழிலாளர்களாக மாறுவது.
- உறவினர்கள் மற்றும் சமூகத்தின் நன்மதிப்பை இழத்தல்.

## புகைப் பழக்கம்

அதே போன்று புகைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது நம்மை கவலையடையச் செய்கிறது. இந்தியாவில் ஆண்டுக்கு 2 கோடிச் சிறுவர்கள் புகைபிடிப்பதற்கு பழகி வருகின்றனர். உலகில் சுமார் 120 கோடிக்கும் அதிகமான மக்கள் புகைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். இதில் தினமும் 11000 பேர் மரணமடைகின்றனர். இவர்களில் 2200 நபர்கள் இந்தியர்கள்.

புகையிலையில் சுமார் 4000க்கும் மேற்பட்ட ரசாயனப் பொருட்கள் உள்ளன. இவற்றில் கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரஜன் சையனைடு, நிக்கோடின், தார் போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் ரசாயணப் பொருட்கள் உள்ளன. புகைப் பிடிப்பவர்கள் விடும் புகையால் குடும்பத்தில் உள்ளவர்கள் குறிப்பாக மனைவி, குழந்தைகள், உறவினர்கள், பணியாளர்கள் மற்றும் அருகில் உள்ளவர்களுக்கு அதே அளவு பாதிப்பு அல்லது அதைவிட அதிகமான பாதிப்புகள் ஏற்படும்

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

அருகில் உள்ள குடி நோய் குறித்த சிறப்பு மருத்துமனையைச் சார்ந்த மருத்துவரை அல்லது மன நல மருத்துவர் அல்லது குடி நோய் குறித்து பணி செய்யும் தன்னார்வ அமைப்புகளை அழைத்து கருத்துரை வழங்கச் செய்யலாம்.



## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் மற்றும் மாணவர் மன்ற பொறுப்பாளர்கள் இணைந்து ஏற்பாடு செய்ய வேண்டும். முன்தயாரிப்பு பணிகளுக்கு மாணவர் மன்ற உறுப்பினர்களில் ஒரு குழுவை அமைத்து அவர்கள் மூலம் நிகழ்ச்சியை நடத்தலாம்.
- ஜுன் 26 ஆத் தேதியை மையப்படுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பல்வேறு வகைகளில் நடத்தலாம்.

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

### செயல்பாடு-01

#### படிநிலை-01

குடி நோய் மற்றும் போதை குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மனித உரிமை மாணவர் மன்றம் தகந்த கருத்தாளரை அழைத்து ஒரு நாள் கருத்தரங்கை பள்ளியில் நடத்தலாம். இதில் பலவகையான போதை பொருட்கள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்க வேண்டும். அக்கருத்தரங்கில் தெளிவு பெற்ற பின்பு அடுத்த கட்ட செயல் திட்டத்தை வகுக்கலாம்.

#### படிநிலை-02- பள்ளிக் குழந்தைகளிடம் ஆய்வு

மனித உரிமை மாணவர் மன்ற உறுப்பினர்களை 3 பேர் கொண்ட சிறு குழுக்களாக பிரித்து பள்ளியில் உள்ள மாணவர்களை சந்தித்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கான பதில்களை பெறலாம்.

- உங்கள் குடும்பத்தில் உள்ள நபர்கள் யாராவது புகை பிடிக்கும் பழக்கம் அல்லது குடிக்கும் பழக்கம் உள்ளதா என்று கேட்கலாம்.
- புகை மற்றும் குடி போதையால் யாரெல்லாம் பாதிக்கப்படுகின்றனர்?
- எவ்வகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன? அது பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

#### படிநிலை-03- பொது மக்களிடம் உத்தேச ஆய்வு

- கிராமத்தில் உள்ள 15 ஆண்கள் மற்றும் 15 பெண்கள் என அடையாளம் கண்டு அவர்களிடம் புகை பிடிப்பது மற்றும் போதையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கேட்க வேண்டும். ஆண்கள் எவ்வாறு பதில் கூறுகிறார்கள் என்றும் பெண்கள் எவ்வாறு பதில் கூறுகிறார்கள் என்றும் பார்க்க வேண்டும்.குறிப்பாக பெண்களிடம் கூடுதலான நேரத்தை செலவிட்டு அவர்களை பேச அனுமதிக்க வேண்டும்.

### செயல்பாடு-02

#### படிநிலை-01- புகை மற்றும் போதையின் பாதிப்பு குறித்த வாசக அட்டை தயாரிப்பு

- ஒரு நாளை தெரிவு செய்து புகை மற்றும் போதையின் பாதிப்பு குறித்து விழிப்புணர்ச்சி நிகழ்ச்சியை கீழ்க்கண்டவாறு நடத்தலாம்.
    - முதலில் புகை மற்றும் குடியின் பாதிப்பு குறித்து அட்டைகளை தயார் செய்யலாம்.
    - அட்டையில் போதை, புகை குறித்த வாசகங்களை எழுதி தயார் செய்ய வேண்டும். அட்டையில் வாசகங்கள், புள்ளி விபரங்கள் உள்ளிட்ட விபரங்களை தயார் செய்யலாம்.
    - அட்டையில் இரண்டு பக்கங்களில் நூல்களை கட்டி கழுத்தில் மாட்டும் வகையில் தயார் செய்ய வேண்டும். குறைந்தது 10 முதல் 15 அட்டைகளை தயார் செய்ய வேண்டும்.

#### படிநிலை-02-விழிப்புணர்வு நிகழ்ச்சி

- முதலில் குறிப்பிட்ட நாளை தெரிவு செய்ய வேண்டும்.
- அடுத்து மக்கள் அதிகமாக கூடும் இடத்தை ஆசிரியரின் உதவியுடன் அடையாளம் காண வேண்டும்.

- பள்ளி முடிந்தவுடன் மாணவர் மன்ற மாணவர்கள் அனைவரும் தலைமையாசிரியரின் ஒப்புதலுடன் தெறிவுச் செய்த இடத்திற்கு செல்லலாம்.
- அந்த இடம் போக்குவரத்து நெரிசல் இல்லாத இடமாக இருக்க வேண்டும். தேவையெனில் காவல் துறை அனுமதி பெற்று நடத்தலாம். பெரும்பாலான இடங்களில் காவல் துறை அனுமதி தேவை இருக்காது.
- புகை மற்றும் குடியின் பாதிப்பு குறித்து சித்தரிக்கும் விதமாக ஒவ்வொருவரும் விதவிதமாக சிலை போன்று நிற்க வேண்டும். நிற்பது பரவலாக இருக்க வேண்டும். சில நிமிடங்கள் வரை அதே நிலை தொடர வேண்டும். அனைவரும் சிலையாக நிற்கும் போது பேச்சாளர் ஒருவர் அவர் மாணவராக இருக்கலாம். அவர் முன்பே தயார் செய்தபடி புகை மற்றும் குடி பழக்கத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சத்தமாக, சுருக்கமாக பேச வேண்டும். அதே போன்று 3 முறை செய்யலாம். பெரிய கிராமமாக இருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் நடத்தலாம். ஒரே நாளில் நடத்த இயலவில்லையெனில் ஒன்றுக்கும் மேற்பட்ட தினங்களில் நடத்தலாம்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- புகைப் பிடித்தல் மற்றம் போதையின் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடம் ஏற்படும்.
- குடும்பத்தில் புகை மற்றும் போதைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படும்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- முன்னாள் மாணவர்கள், உள்ளூர் தொண்டு நிறுவனங்கள், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், கிராம சுகாதார நிலையம்,

## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேசச் சட்டங்களில் மனித உரிமைகள்

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**

**பிரிவு-47**

மக்களின் பொது சுகாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் ஊட்டச்சத்தின் நிலையை உயர்த்துவதே அரசின் முக்கிய கடமையாகும். மருத்துவ பயன்பாடு அல்லாத போதை ஏற்படுத்தும் பானங்கள் மற்றும் மருந்துகள் தடை செய்யப்படும்.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் அரசு சட்டப்பூர்வ, சமூக, நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## உலக சுகாதார நிறுவனத்தின் ஆல்கஹால் குறித்த உலக அறிக்கை

அதிகளவில் ஆல்கஹால் பயன்படுத்துவதால் உலக அளவில் அதிகமான மக்கள் மரணம் மற்றும் ஊனம் அடைகிறார்கள். உலகளவில் 4 சதவீதம் பேர் மரணம் மற்றும் ஊனம் அடைய ஆல்கஹால் காரணமாக உள்ளது.

**Addiction 98 - October 2003**

"Worldwide, alcohol leads to a loss of 58 million years of healthy life annually. This translates to every drinker losing an average 11 days of healthy life per year due to alcohol. That is a heavy loss".

**- Dr. Peter Anderson**

**World Health Report 2002**

"These are dangerous times for the well-being of the world. In many regions, some of the most formidable enemies of health are joining forces with the allies of poverty to impose a double burden of disease, disability and premature death on many millions of people. It is time for us to close ranks against this growing threat".

**- Dr. Gro Harlem Brundtland**

**Director General, WHO**


## உலக சுகாதார நிறுவனம், ஆல்கஹால் குறித்த சர்வதேச யுக்திகள் ஆவணத்தின் முகப்புரை

ஒவ்வொரு ஆண்டும் தீங்கிழைக்கும் மதுவை (ஆல்கஹால்) பயன்படுத்துவதால் தோராயமாக 2.5 மில்லியன் மரணங்கள் நிகழ்கின்றன. இதில் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் இளம் பருவத்தினர் உள்ளனர். உலகளவில் உடல் நலத்தை பாதிப்பதில் ஆல்கஹால் பயன்பாடு மூன்றாவது முக்கிய காரணியாக உள்ளது. தனிநபர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மற்றும் சமூக வாழ்க்கைகையில் கடுமையான விளைவை ஏற்படுத்தும் காரணியாக ஆல்கஹால் தொடர்பான பாதிப்புகள் உள்ளன. மேலும் தீங்கிழைக்கும் மதுவின் பயன்பாடு நான்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக உள்ளது. இது பொதுவாக மாற்றியமைக்ககூடியதும் தடுக்கக் கூடியதும் ஆகும். மேலும் ஆபத்துள்ள காரணிகளில் முக்கிய தொடர்பில்லா நோய்களுக்கான ஆபத்தான காரணியாகவும் உள்ளன. மேலும் தற்போதைய சூழலில் தீங்கு ஏற்படுத்தும் மதுவின் பயன்பாட்டால் உடல்நல சுமையின் காரணமாக தொடர்பு நோய்கள் (தொற்று நோய்கள்) ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் உள்ளதற்கான சாட்சியங்களும் பல உள்ளன. உதாரணத்திற்கு காசநோய் மற்றும் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ்.


சிறப்பான கொள்கை நடைமுறைகள் மூலம் தீங்கிழைக்கும் மது பயன்பாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பொது சுகாதார பிரச்சனைகளை களைய பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம். உண்மையில், இது வளர்ச்சி சார்ந்த பிரச்சனை. உயர் வருவாய் நாடுகளை காட்டிலும் வளரும் நாடுகளில் தீங்கிழைக்கும் மதுவின் பயன்பாட்டுடன் தொடர்புடைய அபாயத்தின் அளவு அதிகமாகவே உள்ளன. உயர் வருவாய் உள்ள நாடுகளில் தீங்கிழைக்கும் மதுவிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் விரிவான சட்டங்கள், தலையீடுகள் மற்றும் போதிய அமைப்புகள் உள்ளதால் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய முடிகின்றன.

உலகளாவிய யுக்தியின் நோக்கத்தை நோக்கி நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நம்மால் தீங்கிழைக்கும் மதுவினால் எதிர்மறை உடல்நல பாதிப்பு மற்றும் சமூக சீரழிவு போன்றவைகளை குறைக்க முடியும். ஆரோக்கியமான சமுதாயத்தை படைப்போம். பாதுகாப்பான, இனிமையான இடங்களில் வாழ, பணிபுரிதல் மற்றும் நம் ஓய்வு நேரத்தை செலவிடல் செய்வோம்.

**டாக்டர். அலா அல்வன், உலக சுகாதார நிறுவனம்.**



# 10. சந்திக்க, சிந்திக்க, செயல்பட...



## அறிமுகம்–Introduction

மாணவர் மன்றத்தின் மிக முக்கிய செயல்பாடு என்பது தாங்கள் கண்டறிந்த, தெரிந்து கொண்ட தகவல்களை அக்கிராமத்துடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களை சந்தித்து நிவர்த்தி செய்வதற்கான பணிகளில் ஈடுபடுவதே. பள்ளி அளவில், கிராம அளவில் தாங்கள் கண்டறிந்த பிரச்சனைகளை தக்க அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் முறையிடுவார்கள்.



## திட்டமிடுதல்–Planning

- மனித உரிமைக் கல்வி ஆசிரியர் தலைமையாசிரியருடன் இணைந்து கலந்தாலோசனை செய்து அரசு அதிகாரிகள் மற்றும் மக்களின் பிரதிநிதிகளை சந்திக்க ஏற்பாடு செய்யலாம்.
- அலுவலகங்கள் தூரமாக இருக்கும் பட்சத்தில் வாகன வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அலுவலர்களை சந்திக்கும் முன்பு தாங்கள் யார் என்பதைப் பற்றி விளக்கமாக எழுதிய தாள்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தாங்கள் சந்திக்கும் அதிகாரி யார் என்பதை அறிந்து எவ்வகையான கோரிக்கை வைக்க போகிறோம் என்பதையும் அறிந்து அதற்கு தகுந்த வகையில் கோரிக்கை மனுவினை தயார் செய்ய வேண்டும். இதில் அனைவரும் கையொப்பம் முன்கூட்டியே இட்டிருக்க வேண்டும்.

- யார் யாரை சந்திப்பது என்பதை முதலில் அடையாளம் காண வேண்டும். ஊராட்சி ஆணையர், கிராம நிர்வாக அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், வேளாண்மை அலுவலர், வட்ட வழங்கல் அலுவலர், கிராம நூலகர். அருகில் உள்ள நீதிமன்றத்தில் இலவச சட்ட உதவி மையம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்.
- மாநகராட்சி மேயர் மற்றும் உறுப்பினர்கள், நகராட்சி,ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், தங்கள் பகுதியில் அமைச்சர் இருந்தால் அவரையும் சந்திக்கலாம்.
- உகந்த தேதியை இறுதிச் செய்து குறிப்பிட்ட அலுவலர்களிடம் முன் அனுமதி பெற்று குறிப்பிட்ட நாளில் தேதியில் சந்திக்கலாம். சந்திக்கும் போது தெளிவாக தாங்கள் செய்த ஆய்வில் கண்டறிந்த அம்சங்களை அதற்குரிய அதிகாரிகளிடம் முறையிடலாம். நிதி தேவைப்படும் பணிகளுக்கு அதற்குரிய அதிகாரிகளிடம் கேட்டுப் பெறலாம்.

## வழக்காடலில் நாம் கவனம் செலுத்த வேண்டியவைகள்

- பிரச்சனைகளை வகைப்படுத்தி வரிசைப்படுத்த வேண்டும்.
- குறிப்பாக கீழ்க்கண்ட பிரச்சனைகளை வரிசைப்படுத்தலாம்.
    - o பள்ளி செல்லா குழந்தைகள்–குறிப்பாக பெண் குழந்தைகள்
    - o ஊட்டச் சத்து குறைவு பிரச்சனைகள்
    - o குழந்தைத் தொழிலாளர்கள்
    - o முறையாக தடுப்பூசி போடாதவர்கள்
    - o கிராமத்தின் கழிப்பறை வசதிகளை மேம்படுத்துதல்
    - o கிராமத்தில் கழிவு நீர் வெளியேற்றுவதற்கான வசதிகள்
    - o மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது.
    - o பொது இடங்களில் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு அறிவிப்பு பலகைகளை வைக்கக் கோருதல்.
    - o கிராமத்தில் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவது
    - o கிராமங்களில் அனைத்து வீதிகளிலும் மரம் நடுவது மற்றும் பராமரிப்பது.
    - o பள்ளிக்கு கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துவது. தொடர்ந்து பராமரிப்பது.
    - o சுற்றுச்சுவர் மற்றும் வேலி அமைக்க ஏற்பாடு செய்வது.
    - o விளையாட்டு மைதானம் அமைக்க கோருதல்(இல்லையெனில் மட்டும்)
    - o பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்தல்

- o பயணிகளுக்கான போதிய பேருந்து நிறுத்த வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- o சாலை குறியீடுகளை தேவையான இடத்தில் வைக்கக் கோருதல்
- o ஆபத்தான சாலை வளைவுகளை கடப்பதற்கான பொது அறிவிப்புகள் போன்றவற்றைக் கோரலாம்.

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

வாகன வசதி, கோரிக்கை மனு தயார் செய்ய தேவையான வெள்ளைத் தாள்கள்



## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

- மூன்று மாதத்திற்கு ஒரு முறை இச்சந்திப்பு கூட்டங்களை ஏற்பாடு செய்யலாம். இது ஒரு அரை நாள் பயணமாக இருக்கலாம்.
- தலைமையாசிரியர் அனுமதியுடன் மனித உரிமைக் கல்வி ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம்.



## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**<u>செயல்பாடு-01</u>**

**<u>படிநிலை-01-தகவல்களை தொகுத்தல்</u>**

- மாணவர்கள் முதலில் தகவல்களை தொகுக்க வேண்டும். எந்தெந்த அலுவலர்களுக்கு எம்மாதிரியான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்பதை முடிவு செய்து கோரிக்கை மனுக்களை தயார் செய்ய வேண்டும்.
- மனித உரிமைக் கல்வி ஆசிரியரின் ஆலோசனைப் பெற்று அதன்படி செயல்பட வேண்டும். குறிப்பாக யார் செல்ல போகிறீர்கள் என்பதை ஒரு வருகைப் பதிவை தயார் செய்து தலைமையாசிரியரிடம் முன் அனுமதி பெற வேண்டும்.
- அதிகாரிகள் அல்லது மக்கள் பிரதிநிதிகளை சந்திக்கும் பொது முறையாக வணக்கம் தெரிவித்து மாணவர்களிலேயே ஒருவர் தாங்கள் வந்ததன் நோக்கத்தை கூற வேண்டும்.
- பிறிதொருவர் தாங்கள் மனித உரிமைக் கல்வி மாணவர் மன்றத்தில் என்ன செய்கிறோம் என்பதை சுருக்கமாக கூற வேண்டும்.
- இறுதியாக தாங்கள் வந்ததன் நோக்கத்தை கூறி கோரிக்கை மனுவை அளிக்க வேண்டும். அவர் உங்கள் மனுவை முழுமையாக படித்து முடிக்கும் வரை அமைதியாக இருக்க வேண்டும். இங்கு தேவையற்ற விவாதம், சத்தம், பொருத்தமற்ற பேச்சு ஆகியவைகளை கூடிய வரை குறைத்துக் கொள்வது நல்லது.
- தாங்கள் சந்திக்கும் முக்கிய பிரமுகரிடமிருந்து குறைந்த பட்ச உறுதி மொழியைப் பெற்றுத் திரும்புங்கள்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- ஜனநாயகத்தில் அனைவரும் பங்கேற்கலாம் என்பதை நடைமுறைப்படுத்தி பார்த்தல்.
- பொது பிரச்சனைகளை கூட்டாக சேர்ந்து தீர்க்க முயலுதல்.
- ஜனநாயக முறையில் பிரச்சனைகளை அணுகும் பண்பை வளர்த்துக் கொள்ளுதல்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

ஊராட்சி மன்ற தலைவர், உள்ளூர் இளைஞர்கள், முன்னாள் மனித உரிமைக் கல்வி மாணவர்கள். உள்ளூர் மக்கள் நல பணியாளர்கள். சுய உதவிக் குழுக்கள்.

## தெரிந்து கொள்ள...

## இந்திய மற்றும் சர்வதேசச் சட்டங்களில் மனித உரிமைகள்

**அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948**

**பிரிவு-29**

ஒரு மனிதன் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்ற போதுதான், அவன் சுதந்திரமான ஆளுமை பெற்ற முழு வளர்ச்சியடைந்த மனிதனாக மாற முடியும். நாட்டில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டு, பிறரது உரிமைகளையும், சுதந்திரங்களையும், அங்கீகரித்தும், மதித்தும், நாட்டின் அறநெறி கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும் பொது அமைதி, மக்களாட்சி சமூகத்தின் பொது நலன் போன்ற வரம்புகளுக்கு உட்பட்டு உரிமைகளையும், சுதந்திரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

**பிரிவு-12**


ஒரு குழந்தைத் தனக்கான சொந்த கருத்துக்களை உருவாக்கி கொள்ளும் உரிமை உண்டு. அக்கருத்துக்களைத் தைரியமாக, தாராளமாக எடுத்துரைக்க உரிமை உண்டு.

**பிரிவு-13**

குழந்தைகளுக்குக் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமை உண்டு. வாய்மொழியாகவோ, அச்சு வடிவமாகவோ, கலை இலக்கிய வடிவிலோ கருத்துக்களை அறியவும் பெற்றுக் கொள்ளவும் உரிமை உண்டு.

**பிரிவு-15**

குழந்தைகள் குழுவாகக் கூடுவதற்கும், பிறரோடு தொடர்புக் கொள்வதற்கும் உரிமை உண்டு.



# 11. மனித உரிமைகளை கலாச்சாரமாய் கொண்டாட...



## அறிமுகம்-Introduction

மனித உரிமை மாணவர் மன்றத்தின் வாயிலாக மனித உரிமைகள் சார்ந்த கருத்துக்களை தன்னை சார்ந்த மக்களிடம் கொண்டு செல்லவும் சக மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கலை நிகழ்ச்சிகளை நாம் ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று ஊடகங்களால் பெரும் பணச்செலவில் வளர்க்கப்படும் விளையாட்டுக்கள் நம் மண்ணை சார்ந்த கலைகள் மற்றும் விளையாட்டுகளை மெல்ல அழித்து வருவதை நாம் அறிவோம். இன்று பள்ளிகளில் கலை நிகழ்ச்சிகள் என்றாலே திரைப்பட பாடல்களை தழுவிய பாடல்களாகதான் உள்ளன. ஆனால் ஒவ்வொரு வட்டாரத்திற்கு உரிய மொழியில் பாடல்கள், கதைகள் உள்ளிட்ட பண்பாட்டு கூறுகள் ஏராளமாக உள்ளன. அவைகளைக் கண்டறிந்து நாம் முழுமையாக பயன்படுத்தும் நபர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்த பாடத்தின் நோக்கம். இதன் மூலம் நம்முடைய கலைகளை வளர்ப்பதுடன் மனித உரிமை சார்ந்த செய்திகளை நேரடியாக மக்களுக்கு கொண்டு செல்வதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படும். நாமும் பல புதிய திறமைகளையும் வளர்த்துக் கொள்ள முடியும். நம்முடைய கலைகள் என்பது யாரையும் தாழ்த்துவதோ அல்லது தனிநபரை தூக்கிபிடிக்கும் வகையிலோ இல்லாமல் மனித உரிமைகளையும் சமத்துவத்தையும் வளர்க்கும் வகையில் இருக்க வேண்டும். இன்றைய இந்திய குடியரசின் அடிப்படை தத்துவங்களான சோசலிசம், சமத்துவம், ஜனநாயகம், சகோதரத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

## திட்டமிடுதல்-Planning

- மனித உரிமைத் தினங்களை மையப்படுத்தி கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகளை நடத்தலாம்.
- உங்கள் பகுதி சார்ந்த முக்கியமான கலைகள் அல்லது மாநிலத்திற்கு உரிய கலைகளை அறிந்து, முறையாக பயிற்சி பெற்று சிறப்பாக கலை நிகழ்ச்சிகளில் வெளிப்படுத்தலாம்.

- மாணவர் மன்றத்தில் ஓராண்டுக்கான திட்டமிடலில் கலைகள் சார்ந்த குழு முழுமையாக திட்டமிடலாம்.
- எம்மாதிரியான நிகழ்ச்சியை நடத்தலாம்,
- எங்கு நடத்தலாம்,
- யாரையெல்லாம் அழைக்கலாம் என்று திட்டமிடலாம்.

மனித உரிமைச் சார்ந்த முக்கிய தினங்களை மையப்படுத்தி நம்முடைய தினங்களை கடைபிடிக்கலாம். முக்கிய தினங்களை இங்கு கீழ்க்கண்டவாறு தொகுத்துள்ளோம்.

| வ.எண் | மாதம்/நாள் | தினத்தின் சிறப்பு |
|---|---|---|
| 1. | ஜனவரி-26 | குடியரசு தினம் |
| 2. | பிப்ரவரி-21 | சர்வதேச தாய் மொழி தினம் |
| 3. | மார்ச்-08 | மகளிர் தினம் |
| 4. | மார்ச்-15 | நுகர்வோர் தினம் |
| 5. | மார்ச்-21 | உலக வன நாள், இனவெறிக்கெதிரான சர்வதேச தினம் |
| 6. | மார்ச்-22 | உலக நீர் தினம் |
| 7. | ஏப்ரல்-07 | உலக சுகாதார தினம் |
| 8. | ஏப்ரல்-14 | அம்பேத்கார் பிறந்த தினம் |
| 9. | ஏப்ரல்-22 | பூமி தினம் |
| 10. | மே-01 | உலக உழைப்பாளர் தினம் |
| 11. | மே-02 | அன்னையர் தினம் |
| 12. | மே-15 | உலக குடும்ப தினம் |
| 13. | மே-31 | புகையிலை எதிர்ப்பு தினம் |
| 14. | ஜீன்-05 | உலக சுற்றுச்சூழல் தினம் |
| 15. | ஜீன்-02 | உலக தந்தையர் தினம் |
| 16. | ஜீன்-20 | உலக அகதிகள் தினம் |
| 17. | ஜீன்-26 | சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தினம் |
| 18. | ஆகஸ்ட்-03 | உலக நன்பர்கள் தினம் |
| 19. | ஆகஸ்ட்-12 | உலக இளைஞர்கள் தினம் |
| 20. | ஆகஸ்ட்-15 | சுதந்திர தினம் |
| 21. | செப்டம்பர்-5 | ஆசிரியர் தினம் |
| 22. | செப்டம்பர்-8 | உலக எழுத்தறிவு தினம் |
| 23. | அக்டோபர்-01 | உலக முதியோர் தினம் |
| 24. | அக்டோபர்-02 | காந்தி ஜெயந்தி, உலக அகிம்சை தினம் |
| 25. | அக்டோபர்-08 | உலக உணவு தினம் |
| 26. | அக்டோபர்-17 | வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் |
| 27. | நவம்பர்-14 | குழந்தைகள் தினம் |
| 28. | நவம்பர்-19 | தேசிய ஒற்றுமை தினம் |
| 29. | நவம்பர்-20 | உலக குழந்தைகள் தினம் |
| 30. | டிசம்பர்-01 | உலக ஏய்ட்ஸ் தினம் |
| 31. | டிசம்பர்-02 | அடிமை முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் |
| 32. | டிசம்பர்-03 | உலக மாற்றுத் திறனாளிகள் தினம் |
| 33. | டிசம்பர்-10 | மனித உரிமைகள் தினம் |

## கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு

- நிகழ்ச்சிகளை நடத்த நமக்கு இரண்டு வகையான தளங்கள் உள்ளன. அவை பள்ளி மற்றும் நாம் சார்ந்த கிராமம். அதற்கு ஏற்ற மாதிரியான வடிவங்களை நாம் தெரிவு செய்ய வேண்டும்.
- கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுக்களை நடத்தலாம். அவை
    - o வீதி நாடகங்கள்
    - o பாடல் போட்டி-எழுதுவது அல்ல ஏற்கனவே உள்ள பாடலை பாடுவது.
    - o கதை எழுதுவது
    - o பட்டி மன்றம்
    - o பேச்சுப் போட்டி
    - o வினாடி வினா
    - o ஓவியம் வரைதல்
    - o முழக்கம் எழுதுவது
    - o வில்லுப்பாட்டு-கதை பாட்டு
    - o பத்திரிகைகளுக்கு கதை, கட்டுரை எழுதுவது
    - o மனித உரிமைகள் சார்ந்த வாசகங்களை சுவர்களின் எழுதலாம்.
    - o கருத்தாளர்களை அழைத்து சொற்பொழிவுகளை நடத்தலாம்.
    - o விவாதங்களை நடத்தலாம் மேலும் நம் கிராமம் சார்ந்த விளையாட்டுக்களை அடையாளம் கண்டு விளையாடலாம்.

## தேவைப்படும் வளங்கள் (பொருட்கள், நிதி, மனித வளம்)

- வீதி நாடகங்களுக்கு தேவையான சில பொருட்களை (துணிகள் மற்றும் அலங்கார பொருட்கள்) வீட்டிலிருந்து கொண்டு வரலாம்.
- பள்ளியில் உள்ள பொருட்களை பள்ளி தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்று பயன்படுத்தலாம்.
- வீதி நாடகங்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சி நேரங்களில் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்க தலைமையாசிரியர் அல்லது ஊராட்சி தலைவரிடம் கோரலாம்.
- கிராமத்தில் நிகழ்ச்சி நடத்த உள்ளூர் இளைஞர்கள் மற்றும் ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்களின் உதவியை நாடலாம்.
- கருத்துரை வழங்க கருத்தாளர்களை அழைக்கலாம். அவர்கள் பெரும்பாலும் உள்ளூர் தன்னார்வ அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், கல்வி அதிகாரிகள் உள்ளிட்டவர்களை அழைக்கலாம்.

## யார் ஏற்பாடு செய்வது ? எப்பொழுது?

- மனித உரிமைக் கல்வி ஆசிரியரின் ஆலோசனையுடன் மாணவர் மன்ற பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து நடைமுறைப்படுத்தலாம்.
- கிராமத்தில் சராசரியாக இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நிகழ்ச்சிகளை நடத்தலாம்.
- பள்ளியில் மாதம் ஒரு முறை நிகழ்ச்சி நடத்தலாம். கூடியவரை காலை வழிபாட்டு நேரத்தை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

## நடைமுறைப்படுத்தும் முறை-Implementation

**செயல்பாடு -01-குறிப்பிட்ட தினத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்**

குறிப்பிட்ட தினத்தை பற்றி முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஒரு நாள்சிறப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யலாம். ஆசிரியர்களே அத்தினத்தின் சிறப்பு பற்றி பகிர்ந்து கொள்வார்கள்.

**செயல்பாடு -02- அறிவிப்பு வெளியிடல்**

குறிப்பிட்ட தினத்தைப் பற்றி காலை பள்ளி கூடுகையில் பகிர்ந்து கொள்ளலாம். மேலும் பள்ளி தகவல் பலகையில் அத்தினத்தின் சிறப்பு பற்றிய வாசகங்கள் மற்றும் புள்ளி விபரங்களையும் எழுதி வெளியிடலாம்.

**செயல்பாடு -03- தினத்தை கொண்டாடுதல்**

மாணவர் மன்றத்தின் ஆண்டு திட்ட வழிகாட்டுதல்படி நிகழ்ச்சிகளை நடத்தலாம். கலை நிகழச்ச்சியை நடத்துவதற்கு முன்பு அத்தினத்தைப் பற்றி முழுமையாக புரிந்து கொண்ட பின்பு மாணவர் மன்ற உறுப்பினர்கள் இணைந்து நிகழ்ச்சி நடத்தலாம். அவை விழிப்புணர்வு நாடகம், பாடல்கள், கவிதைகள், நடனம் உள்ளிட்ட முறைகளை கொண்டு நடத்தலாம். அல்லது அதையே ஒரு போட்டியாக நடத்தி அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளச் செய்யலாம்.

## எதிர்பார்க்கும் அடைவு-Expected outcome

- மாணவர்களிடம் எளிதாக மனித உரிமைப் பார்வை வளரும்.
- பள்ளியைச் சார்ந்த கிராமத்தில் மனித உரிமைச் சார்ந்த சிந்தனை வளரும்.
- குழு உணர்வு ஏற்பட்டு ஜனநாயக தன்மை வளரும்.

## தோழமை நபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள்

- முன்னாள் மாணவர்கள், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், லயன்ஸ் கிளப் மற்றும் ரோட்டரி கிளப், அனைவருக்கும் கல்வி திட்டம், தன்னார்வ அமைப்புகள்.

## அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948

**பிரிவு-27**

தடையின்றி சமுதாயத்தின் கலாச்சார வாழ்க்கையில் பங்கேற்பதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும், அறிவியல் முன்னேற்றத்திலும், அதனால் விளையும் நன்மைகளிலும் பங்கு பெறுவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

## ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை-1989

**பிரிவு-03**

குழந்தைகளுக்கான செயல்பாடுகளில் குழந்தைகளுக்கான முதன்மைத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.

**பிரிவு-17**

குழந்தைகளின் முழு வளர்ச்சியை கருதி தேசிய அளவிலும் உலக அளவிலும் சமூகத் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கின்ற செய்திகளைக் குழந்தைகள் பெற வழிவகை உருவாக்கப்பட வேண்டும்.

**பிரிவு-27**

குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கருதி குழந்தைகளின் தரமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

## பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை-1966

**பிரிவு-15**

கலாச்சார வாழ்க்கையில் பங்கு பெறும் உரிமையும், அறிவியல் வளர்ச்சியால் விளைந்த பயன்களை அனுபவிக்கும் உரிமையும், தன்னால் உருவாக்கப்பட்ட அறிவியல், கலை அல்லது இலக்கிய படைப்புகளினால் விளையும் ஆதாயங்களை பாதுகாக்கப்படுவதற்கான உரிமையும் அனைவருக்கும் உண்டு.

## பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை-1979

**பிரிவு-05**

பெண்கள் மீது மரபு ரீதியாக சமூக, கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன் தீர்மானக் கருத்துக்களை, உயர்வு தாழ்வு கற்பிக்கும் கற்பிதங்களை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

